Registered as a news paper. பக்கங்கள்: பத்து

விலை ரூபா 10.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்



TCN தேவி கருமாரி
நகை மாடம்
தங்கப்பவுண் நகை வியாபாரம்
ஓடர் நகைகள் குறித்த தவணையில் உத்தரவாதத்துடன் 22 கரட்டில் செய்து கொடுக்கப்படும்.
66, Kasthuriar Road, Jaffna
66, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2037 ஆனி 22 ஹிஜ்ரி 1427 ஜ ஆகிர் 08 (07.07.2006) வெள்ளிக்கிழமை இதழ் 279

# அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் கருணா குழு செயற்படுகிறது!



## ஆதாரங்கள் உள்ளது என்கிறார் ஹென்றிக்சன்

கொழும்பு —

அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில்தான் கருணாகுழு செயற்படுகிறது என்பதற்கு போதுமான ஆதாரங்கள் உள்ளன. இவற்றை அரசாங்கத்திடம் கையளித்திருப்பதாக இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் பிரிகேடியர் ஜெனரல் உல்ப் ஹென்றிக்சன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது -

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுப் பணிகள் முடிந்ததாகக் கருதவில்லை. கண்காணிப்புக்குழுவுக்கு பல மாற்றுத் தயாரிப்புகள் உண்டு. உரிய மாற்றங்களுடன் தொடர்ந்து

(10 ஆம் பக்கம் பார்க்க)

## அவசரகாலச் சட்டம் மேலும் 1 மாதம் நீடிப்பு

கொழும்பு —

அவசரகாலச் சட்டம் மேலும் ஒரு மாதத்துக்கு நீடிக்கப்பட்டுள்ளது. நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அவசரகாலச் சட்ட நீடிப்பு பிரேரணைக்கு ஆதரவாக 102 வாக்குகள் அளிக்கப்பட்டன.

ஆளுங்கட்சியுடன் இணைந்து ஜே.வி.பி. ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்களித்தனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ புலனாய்வு அதிகாரியால் ஊடகவியலாளர் லக்மல் கொலை!

### நாடாளுமன்றில் தெரிவிப்பு

கொழும்பு —

அவிசாவளையில் ஐந்து தமிழர்களின் தலைகளைத் துண்டித்து படுகொலை செய்த சம்பவத்துடன் தொடர்புடைய குற்றவாளிகளை அறிந்து கொண்டதால்தான் ஊடகவியலாளர் சம்பத் லக்மல் - இராணுவப் புலனாய்வுத்துறை அதிகாரிகளால் கொல்லப்பட்டதாகத் தெரிவித்து நேற்று நாடாளுமன்றில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தினார் ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர் ரங்க பண்டார.

நாடாளுமன்றில் அவசரகாலச் சட்ட நீடிப்பு விவாதத்தின் போது நேற்று ஐக்கிய தேசியக் கட்சியின் புத்தளம் நாடாளுமன்ற உறுப்பினர் ரங்க பண்டார கூறியதாவது -

சிங்கள ஊடவியலாளர் லக்மல் படுகொலையில் தொடர்புடையோர் யார் என்பது அம்பலமாகி விட்டது. இராணுவத்தின் லெப்டினன்ட் ஒருவரும், அவரது சகாக்களுமே லக்மல் சம்பத்தின் படுகொலையில் தொடர்புடையவர்கள் என்று எங்களுக்கு தெரியவந்துள்ளது.

அவிசாவளையில் ஐந்து தமிழர்கள் தலை துண்டிக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தில் தொடர்புடையோரை லக்மல் சம்பத் அறிந்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஊடகவியலாளர் படுகொலையை கண்டித்து நேற்று ஆர்ப்பாட்டம்!

கொழும்பு —

ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்படுவதைக் கண்டித்து கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஊடகவியலாளர் சம்பத் லக்மல் டி சில்வா படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்தும், ஏனைய ஊடகவியலாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த கோரிக்கை விடுத்து நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் நாட்டிலுள்ள ஊடக நிறுவனங்களின் பிரதிநிதிகளும், சுயாதீன ஊடகவியலாளர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)



# ஆளும்கட்சிக்கு தாவினார ஐக்கிய தேசியக் கட்சி எம்.பி!



கொழும்பு

ஐக்கிய தேசியக் கட்சியின் இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுசுந்த புஞ்சி நிலமே நேற்று ஆளும் கட்சியுடன் இணைந்து பிரதி அமைச்சராக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

நேற்று அலரி மாளிகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் கிராமிய பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சராக பதவியேற்றார்.

ஜனாதிபதி தேர்தலுக்குப் பின்னர் ஆளும் கட்சிக்குத் தாவிய நான்காவது ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# டிசம்பர் மாதத்துக்கு பின் 278 படையினர் பலி!

கொழும்பு

கடந்த வருடம் டிசம்பர் மாதத்துக்குப் பின்னர் 521 பேர் பல்வேறு மோதல்களில் கொல்லப்பட்டிருப்பதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்து வெளியிட்ட அவர்-

கொல்லப்பட்ட 521 பேரில் 278 பேர் பாதுகாப்பு படைப்பிரிவுகளைச் சேர்ந்தவர்கள். எஞ்சிய 243 பேர் பொதுமக்களாவர்.

கொல்லப்பட்ட பாதுகாப்புப் படையினரில் 131 இராணுவத்தினர், 91 கடற்படையினர், 30 பொலிஸார், 22 ஊர்காவல் படையினர், 4 விமானப்படையினர் ஆகியோர் உள்ளடங்கியுள்ளனர்.

இதேவேளை, காயமுற்றவர்களில் 458 பாதுகாப்புப் படையினரும், 363 சிவிலியன்களும் அடங்குவர்.

250 இராணுவத்தினர், 133 பொலிஸார், 58 கடற்படையினர், 12 ஊர்காவற் படையினர், 5 விமானப்படையினர் ஆகியோரே காயமுற்றவர்களாவர் என அவர் மேலும் தெரிவித்தார்.

# சிப்பாயை சுட்டுக்கொன்றபின் படைச் சிப்பாய் தற்கொலை!

திருகோணமலை

திருகோணமலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இராணுவச் சிப்பாய் ஒருவர் விசாரணைக்குக் கூட்டிச் செல்ல முற்பட்டபோது சக சிப்பாய் ஒருவரின் துப்பாக்கியைப் பறித்து அவரை சுட்டுக்கொன்றுவிட்டு தானும் சுட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

திருகோணமலை 22ஆவது டிவிசன் தலைமையகத்தில் நேற்றுக் காலை 8.30மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

ஹசலக்கவைச் சேர்ந்த வீரசிங்க என்ற சிப்பாய் கடந்தமாதம் 26 ஆம் திகதி கித்துனுதுவ இராணுவ முகாமில் இருந்து காணாமல் போயிருந்தார்.

பின்னர் இவர் ஹொரவப்பொத்தானை (10 ஆம் பக்கம் பார்க்க)

# சிப்பாயை காணவில்லை; ஆயுதம், சீருடை மீட்பு

சங்கானை

சங்கானை இராணுவ முகாமைச் சேர்ந்த படைச் சிப்பாய் ஒருவர் நேற்றுமாலை முதல் காணாமல் போயுள்ளார்.

இவருடையதெனக் கூறப்படும் இராணுவச் சீருடை மற்றும் துப்பாக்கி என்பன இந்தப் பகுதி வயலில் இருந்து மீட்கப்பட்டன.

நேற்று நண்பகலுக்குப் பின்னர்
(10 ஆம் பக்கம் பார்க்க)

# வேலணையில் துப்பாக்கிச்சூடு கடற்படை அதிகாரி உயிரிழப்பு!

யாழ்ப்பாணம்

வேலணை - துறையூரில் கடற்படையினர் மீது நேற்றுக்காலை நடத்தப்பட்ட தாக்குதலில் இளநிலை கடற்படை அதிகாரி ஒருவர் கொல்லப்பட்டார்.

துறையூரில் ரோந்துசென்ற படையினர் மிது நேற்றுக்காலை 11 மணியளவில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. மறைந்திருந்து கைத்துப்பாக்கியால் சுடப்பட்டத்தில் படுகாயமடைந்த கடற்படையின் இளநிலை அதிகாரியான சீப் பெற்றி ஒவ்விசர் பலாலி இராணுவ வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட பின்னர் மரணமானார்.

இந்தச் சம்பவத்தையடுத்து நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய உற்சவத்துக்குச் சென்றுவிட்டு திரும்பிய
(10 ஆம் பக்கம் பார்க்க)




# வெற்றிதான்; கனதி இல்லை



மியூனிச் —

இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் - மியூனிச்சில் போர்த்துக்கல் அணியும், பிரான்ஸ் அணியும் மோதின. பிரான்சிய அணித்தலைவர் விளையாட்டின் 33 ஆவது நிமிடத்தில் கிடைத்த பெனால்ரி வாய்ப்பை சரியாகப் பயன்படுத்திக் கொண்டார்.

பிரான்ஸ், இத்தாலியை இறுதிப் போட்டியில் சந்திப்பதற்கும் போர்த்துக்கல் துயரத்துடன் வெளியேறவும் அந்த ஒரேயொரு கோல் காரணமாயிற்று. போர்த்துக்கல் இந்தத் தோல்வியால் கவலைப்பட இரண்டு காரணங்கள் மேலதிகமாக இருக்கின்றன.

ஒன்று, பிரான்ஸ் பெனால்ரி வாய்ப்பைப் பெறுமளவுக்கு தியரி ஹென்றியின் சந்தர்ப்பத்தைக் கெடுத்து கார்வால்கோ இவரை விழுத்தினாரென்பதற்குப் பதில் தேடுவது கடினமாக இருக்கிறது. இதேபோன்ற சம்பவம் பிரான்சின் ஆபத்துப் பிரதேசத்தில் நடைபெற்றபோது மத்தியஸ்தர் ஏன் அதைக் கண்டுகொள்ளவில்லை என்பது இரண்டாவது.

ஆனால், சினேடின் சிடேன் போன்றதொரு சிங்கம் இப்படியொரு இரை கிடைத்தால் விடுமா? ரிக்காடோ பந்து வந்த சரியான திசையில் பாய்ந்தும் கூட பந்து மின்னலாக போர்த்துக்கல் வலைக்குள் புகுந்துவிட்டது.

ஆரம்பத்திலேயே இரண்டு அணிகளும் ஒரு சில அருமையான சந்தர்ப்பங்களைப் பெற்றன. ரசிகர்கள் வியப்பின் எல்லைக்கே போனார்கள், அந்தச் சந்தர்ப்பங்கள் தவறவிடப்பட்ட





போது.

1975 இற்குப் பின் இதுவரையிலும் போர்த்துக்கல் அணி பிரான்சை வென்றதில்லை. 2006 ம் அப்படியே முடிந்தது. இளைஞர் கிறிஸ்ரியானோ றொனால்டோ தன் பங்கைச் சரிவரவே செய்தார்.

ஆனால், மைதானத்தில் அவருக்குக் கூக்குரலே பதிலாகக் கிடைத்தது. காரணம் வெய்ன் ருணி - றொனால்டோ சர்ச்சையில் முழுமையாகப் பிழைவிட்டு வெளியேறப்பட்ட ரூணி மைதான ரசிகர்களுக்கு (அனேகமானோர் ஜேர்மனியர்களே) புனிதராகத் தெரிந்திருக்கவேண்டும்.

மைதான ஆதரவென்பது ஒரு அணிக்கு மிக அவசியமென்றால், ஏன் கிறிஸ்ரியானோவுக்கு அது கிடைக்கவில்லை. ஜேர்மனியர்களுக்கே அது வெளிச்சம்.



மறுபுறம் சினேடின் சிடேன் இந்த உலகக்கிண்ண ஆட்டங்களுடன் ஓய்வுபெறப்போவதாக அறிவித்துள்ளார். 1998 இல் சிடேன் உலகக்கிண்ணம் வென்றார். அதனை மீண்டும் செய்ய இன்னும் ஒரேயொரு படியைக் கடக்கவேண்டும்.

இன்னொருபுறம் போர்த்துக்கல் பயிற்றுனர் லூயிஸ் பிலிப் ஸ்கொலாரி. பிரேசில் பயிற்றுனராகவும், போர்த்துக்கல் பயிற்றுனராகவும் தொடர்ச்சியாக பன்னிரண்டு வெற்றிகளைக் கண்டவர். இந்த அரையிறுதியாட்டம் அவரது பதின்மூன்றாவது ஆட்டம்.

இலக்கம் 13 துரதிஷ்டமானது என்பது ஸ்கொலாரியைப் பொறுத்து உண்மையாகிவிட்டதோ? அவரின் அணி வீரர்கள் இறுதிவரை தம் உயிரைக் கொடுத்துப் போராடினார்கள். ஆனால், அதிஷ்டம் என்ற ஒன்றும் இருக்கவேண்டும்போலத்தான் தெரிகிறது.

இறுதி மூன்று நிமிடங்களில் பல அணிகளுக்குக் கடைக்கண் காட்டிய அதிஷ்ட தேவதை போர்த்துக்கலைப் பொறுத்தமட்டும் பார்வையைத் திருப்பிக்கொண்டது ஏன்? இறுதி வேளையில் தனது கோல் பிரதேசத்தைவிட்டு எதிரணிக் கோல் பிரதேசத்துக்கே வந்துவிட்டார் போர்த்துக்கல் கோல் காப்பாளர் ரிக்காடோ. போர்த்துக்கலின் பரிதாபகரமான ஆனால், சாதிக்கவேண்டுமென் மனத்தைரியத்துக்கு இது ஒரு உதாரணம்.

என்னவாக இருந்தாலும் மைதானம் பரவி நிரவி வந்த கோலாக இல்லாமல், ஒரு புள்ளியில் வைத்துப் பெற்ற கோல் என்ற வகையில் பிரான்சின் வெற்றி பிரமாதப்படுத்துவதற்குரியதான ஒன்றாகத் தெரியவில்லை.

எனினும், விதி வலிது. அதன்படி போர்த்துக்கல் வெளியேறிவிட்டது உண்மைதான். ஆனால், பயிற்றுனர் ஸ்கொரி, பிகோ, கிறிஸ்ரியானோ றொனால்டோ, மனிஷ் போன்றோர் மனதில் நிற்கிறார்களே. அவர்களை வெளியேற்றமுடியுமா?

## மூன்றாம் பிறை

2006 FIFA அரை இறுதிப் போட்டிகள்வரை முடிவடைந்துள்ள நிலையில் இதுவரை - HAT-TRICKS ஏதும் பெறப்படவில்லை. மொத்தம் 60 ஆட்டங்கள். அதில் 138 கோல்கள்.

அடுத்த இரண்டு ஆட்டங்களும் ஹட்ரிக் இல்லாமல் நிறைவு பெற்றால், FIFA வரலாற்றில் இது முதல் முறையாக இருக்கும் என்று கூறப்படுகிறது.

1954 ஆம் ஆண்டு சுவிற்சர்லாந்தில் உலகக்கிண்ணப் போட்டிகள் நடைபெற்றபோது அங்கு ஏழு ஹட்ரிக்குகள் போடப்பட்டன. 1938 இல் பிரான்சில் உலகக்கிண்ணப் போட்டிகள் நடைபெற்றபோது-ஐந்து ஹட்ரிக்குகள் பெறப்பட்டன.

1982 இல் ஸ்பானியாவிலும், 1986ல் மெக்சிக்கோவிலும் உலகக் கிண்ணப் போட்டிகள் நடைபெற்றபோது - இரண்டு நாடுகளிலும் தலா நான்கு ஹட்ரிக்குகள் பெறப்பட்டன.

இறுதியாக 2002 உலகக்கிண்ணப் போட்டிகள் நடைபெற்றபோது போர்த்துக்கல் அணியின் பவ்லீட்டா போலந்துக்கு எதிராக நான்கு கோல்கள் போட்டார். இதுவே கடைசியாகுமா அல்லது இன்னும் ஒரு ஹட்ரிக்கை எதிர்பார்க்கலாமா?

இதுவரை பெறப்பட்ட ஹட்ரிக் பற்றிய விபரங்கள் -

| | | | |
|---|---|---|---|
| 1982 | பாலோறோசி (இத்தாலி) | - | பிரேசில் |
| | றுமினிகே (ஜேர்மனி) | - | சிலி |
| | லாஸ்லோ கிஸ் (ஹங்கேரி) | - | எல்சல்வடோர் |
| | பொனிக் (போலந்து) | - | பெல்ஜியம் |
| 1986 | புரட்ரஜீனோ (ஸ்பானியா) | - | டென்மார்க் |
| | இகோர் பெலனோவ் (ரஷ்யா) | - | பெல்ஜியம் |
| | பிரபன் எல்ஜார் (டென்மார்க்) | - | உருகுவே |
| | ஜெரி லினேகர் (இங்கிலாந்து) | - | போலந்து |
| 1990 | தோமஸ் சுக்ராவி (செக்கோஸ்லோவாக்கியா) | - | கோஸ்டாரிக்கா |
| | மிச்செல் (ஸ்பானியா) | - | கொரியா |
| 1994 | ஒலெக்செலென்கோ (ரஷ்யா) | - | கமரூன் |
| | படிஸ்டூடா (ஆர்ஜென்ரீனா) | - | கிரேக்கம் |
| 1998 | படிஸ்டூடா (ஆர்ஜென்ரீனா) | - | கிரேக்கம் |
| 2002 | பவ்லீட்டா (போர்த்துக்கல்) | - | போலந்து |
| | குளோஸ் (ஜேர்மனி) | - | சவுதி அரேபியா |

இந்தப் பட்டியல் நீண்டு செல்கிறது. 2006 இல் நீளும்பட்டியலில் ஒரு சேர்க்கை வருமா?

## மனிதரில் இத்தனை நிறங்களா?

இங்கு குறிப்பிடும் விடயம் ஜேர்மனி, இத்தாலி அணிகளுக்கிடையிலான அரை இறுதியாட்டம் நடைபெறும் ஜேர்மனியில் முந்திரிக்கொட்டை பத்திரிகையாளர் அல்லது ஒரு திமிர்பிடித்த பத்திரிகையாளர் எழுதிய பத்திரிகைக் குறிப்பு தொடர்பிலானது.

ஒரு ஜேர்மனிய வாராந்தரி தாம் ஏதோ ரசனைக்குரிய விடயம் ஒன்றை பிரசுரிக்கிறோம் என்று நினைத்ததோ அல்லது தமது தாழ்வுச்சிக்கலை வெளிப்படுத்தியதோ தெரியவில்லை. அபத்தமாக சில விடயங்களை பிரசுரித்தது.

அதாவது இத்தாலி தமது பழைய வெஞ்சினத்தை முடித்துக்கொள்ள எப்படியும் ஜேர்மனியைத் தோற்கடிக்க முயற்சிக்கும் என்று எழுதியுள்ளது. இந்தக்கட்டுரையின் ஆழ, அகலங்கள் பல. 'இவர்கள் எல்லா விடயங்களிலும் சோம்பேறிகள், சொதப்புபவர்கள்' என்று எழுதியிருக்கிறது அந்த வாராந்தரி.

இத்தாலிய அணித்தலைவர் பேபியே கன்னவரோ இது பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில் - இத்தாலிய அணித்தலைவரென்ற வகையில் நான் இந்த விடயத்தில் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறேன். விமர்சனத்துக்குட்பட்ட பழைய பாரம்பரியக் கருத்தொன்றையே இந்தக்கட்டுரை புலப்படுத்துகிறது.

நாகரிக சமூக அமைப்பொன்றைக் கொண்ட ஜேர்மனியிலிருந்து இப்படி ஒரு கருத்து வெளிவந்திருப்பது எனக்குப் பெரிய அதிர்ச்சியாக இருந்தது என்கிறார் அவர்.

இத்தாலியர்கள், ஜேர்மனிய நாட்டில் தமது உடல் உழைப்பைக் கொடுத்து வருமானம் தேடுபவர்கள் போலத்தெரிகிறது. அந்த விடயம் மறைமுகமாக இந்தக் கட்டுரையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது போலத்தெரிகிறது. அதுதான் இத்தாலிய வீரர்களை மனம்நோகச் செய்திருக்கிறது போலத் தெரிகிறது.

இத்தாலிய மத்திய வரிசை வீரர் ஜெனாரோ கட்டூஸா மனம்நொந்து கூறும்போது -

இந்தக்கட்டுரை எனது தந்தையையும், குறைந்த வேதனத்துக்கு ஜேர்மனியில் வேலை செய்யும் ஒவ்வொரு இத்தாலியரையும் அவமதித்துவிட்டது என்கிறார். ஜேர்மனி, இத்தாலியரின் வருமானத்துக்கு ஒரு தொழிலைக் காட்டியது என்பது உண்மைதான்.

ஆனால், இத்தாலியர்கள் தம் உண்மையான உழைப்பைக் கொடுத்தே தம் வருமானத்தை தேடிக்கொண்டனர் என்கிறார்.




ஒரு இத்தாலியப் பத்திரிகையாளர் கருத்துக்கூறும்போது - ஜேர்மனி ஒன்றிணைந்து எல்லோருக்கும் அன்பானவர்கள் என்ற நிலை இருக்கும்போது, இப்படியான ஒரு விடயம் மிகவும் வருத்தமளிப்பதாக உள்ளது என்கிறார்.

உலகக்கிண்ணப் போட்டிகள் ஜேர்மனியில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேளையில், ஜேர்மனியின் மகுடவாசகம் பின்வருமாறு அமைகிறது. 'ஜேர்மனிய நண்பர்களுக்கு உலக மக்கள் எல்லோரும் விருந்தினர்கள்'. இப்படி உன்னதமான செயற்பாடுகளை ஜேர்மனி எனும் மகோன்னத தேசம் செய்துகொண்டிருக்கும்போது, இத்தாலியரை அவமதிக்க முயன்ற அந்த ஜேர்மன் கட்டுரையாளரும், அதனைப் பிரசுரித்த வாராந்தரியின் ஆசிரியரும் இந்த நாகரிக உலக மக்களின் அங்கம் என்று ஏற்றுக்கொள்ளத் தகுதியற்றவர்கள் என்பதைத்தவிர வேறொன்றும் உரைப்பதற்கில்லை.

இதேவேளை, வெள்ளை இன மக்களுக்கு எதிராகவே வெள்ளை இன மக்களின் எண்ணப்பாங்கு இப்படி இருந்தால் இனவாதத்துக்கு எதிர்ப்புத் தெரிவிப்போம் என்று வெள்ளை இனத்தவர் கூறுவது எவ்வளவு தூரம் உண்மை என்பதும் எமது மனதில் உருவாகும் கேள்விதான்.

அடுத்து ஐரோப்பாவுக்குள் இப்படியான கறைகள் இருக்கின்றனவா என்பதும் துயரமானதொரு கேள்விதான். ஆனால், அந்தக் கேள்வியைக் கேட்காமல் இருக்கமுடியவில்லை.

# புலிகள்மீது தாக்குதலுக்கு சரியான தருணம் இதுவே!



## ஜனாதிபதிக்கு சோமவன்ச ஆலோசனை

கொழும்பு —

தமிழீழ விடுதலைப் புலிகள் மீது இராணுவத் தாக்குதலை நடத்த சரியான நேரம் இதுதானென ஜனாதிபதி மகிந்தவுக்கு ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க யோசனை தெரிவித்துள்ளார்.

கொழும்பு நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற ஜே.வி.பியின் சிறப்பு மாநாட்டில் சோமவன்ச அமரசிங்க பேசியதாவது -

அரசாங்கத்தில் இணைய வேண்டும் என்று பலமுறை எங்களுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அழைப்பு விடுத்துள்ளார். இது விடயத்தில் எங்களுக்குச் சில கருத்துகள் உண்டு.

தனது செயற்பாடுகளின் மூலம் மகிந்த ராஜபக்ஷ தன்னை நிரூபிக்க வேண்டும்.

நாட்டின் தற்போதைய மோசமான பாதுகாப்புச் சூழ்நிலை உட்பட அரசாங்கத்தை ஆதரிக்க போதுமான காரணங்கள் உள்ளன. பயங்கரவாதத்தைத் தோற்கடிக்க வேண்டுமெனில், எது பயங்கரவாதம் என்பதை மகிந்த ராஜபக்ஷ தெளிவாக அடையாளம் கண்டுகொள்ள வேண்டும்.

யுத்தத்தின் அடிப்படையே தாக்குதலும், தற்காப்பும்தான். நம்மைத் தற்காத்துக் கொள்வதன் மூலம் மட்டுமே பயங்கரவாதத்தைத் தோற்கடித்து விட முடியாது.

இப்போது இராணுவத் தாக்குதல்களுக்கு அரசாங்கம் மாறவேண்டிய அதி உச்ச நேரம் இது.

இந்த நாட்டின் தலைவர் என்ற வகையில் மக்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு ஜனாதிபதி மகிந்தவுக்கு உண்டு.

அனைத்து சர்வதேச மற்றும் உள்நாட்டு சக்திகளும் தனி ஈழத்தை அமைப்பதற்காக விடுதலைப் புலிகளை ஆதரிக்கின்றனர். இலங்கையை ஒரு தோல்வியடைந்த நாடு என்று அமெரிக்காவின் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளமை குறித்து சந்தேகங்கள் உள்ளன.

சூடான், சோமாலியா நாடுகளின் நிலைமை வேறானவை. இந்த நிலையில் மகிந்த ராஜபக்ஷவை நாங்கள் பாதுகாப்போம்.

அவருக்கு ஏதேனும் நிகழ்ந்தால் ஒரு ஆட்சியாளர் இல்லாத தோல்வியடைந்த நாடாகத்தான் நிச்சயம் இலங்கை உருவாகும். உள்நாட்டில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக ஐக்கிய தேசியக் கட்சி செயற்படுகிறது.

இலங்கையில் தமிழீழ விடுதலைப் புலிகளைத் தடை செய்யாதிருப்பது முட்டாள்தனமானது. விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் களையப்படும் வரை பேச்சுக்களுக்கு அரசாங்கம் செல்லக் கூடாது. தற்போது அவர்கள் அமைதிப் பேச்சுக்கள் மூலமான தீர்வுக்குத் தயாராக இல்லை என்று தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

தமிழீழ விடுதலைப் புலிகளிடம் உள்ள சிறார்கள் மற்றும் இளைஞர்கள் அதிலிருந்து விலகினால் அவர்களுக்கு முறையான கல்வி மற்றும் வேலைக்கான உத்தரவாதத்தை அரசாங்கம் அளிக்க வேண்டும். அவர்கள் விலகிவந்தால் அந்த இளைஞர்களுக்காக எமது ஜே.வி.பி உறுப்பினர்கள் தங்களது பணிகளைத் தியாகம் செய்வதில் இரண்டாம் கருத்துக்கே இடமில்லை எனத் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் இனப்பிரச்சினை தொடர்பான 5 தீர்மானங்கள் முன்வைக்கப்பட்டன.

இனப்பிரச்சினையானது உள்நாட்டுப் பிரச்சினை. உள்நாட்டு விடயத்தில் சர்வதேச சக்திகள் தலையிட அழைக்கக்கூடாது. நாட்டின் இறையாண்மைக்கு அச்சுறுத்தலாக உள்ள சக்திகளுக்கு எதிராகப் போராட வேண்டும் என அவர் தெரிவித்தார்.

# சிறைச்சாலை ஆணையாளருக்கு உரிய பாதுகாப்பு இல்லையாம்!

## கொழும்பு ஊடகம் தெரிவிப்பு

கொழும்பு —

சிறைச்சாலை ஆணையாளர் மேஜர் ஜெனரல் வஜிர விஜேகுணவர்த்தனவை படுகொலைசெய்யும் நோக்குடன் தற்கொலை குண்டுதாரி கொழும்புக்கு வந்துள்ளதாக இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் கண்டறிந்துள்ளனர் என்று கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக அந்தப் பத்திரிகையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

மேஜர் ஜெனரல் வஜிர விஜேகுணவர்த்தனவுக்கு இலக்கு வைக்கப்பட்டிருப்பது குறித்து இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் அவருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது -

இருப்பினும் அவருக்குப் போதிய பாதுகாப்பு வழங்கப்படவில்லையெனத் தெரிகிறது.

இராணுவத்தில் கடமையாற்றிய காலத்திலிருந்து விடுதலைப் புலிகளின் இலக்காகியிருக்கும் மேஜர் ஜெனரல் வஜிர விஜேகுணவர்த்தன- வெலிக்கந்த 23 ஆவது டிவிசன் கட்டளை அதிகாரியாகவும், கொழும்பு நடவடிக்கைகள் அதிகாரியாகவும் பணியாற்றி, விடுதலைப் புலிகளுக்கு எதிராகச் செயற்பட்டவர். இதனால், அவர் விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகியுள்ளார்.

இராணுவத்திலிருந்து ஓய்வுபெற்றாலும் அவருக்கு அச்சுறுத்தல் நிலவுவதாகவும், அவருக்குத் தற்போது இராணுவப் பாதுகாப்பு இன்மையால் தங்களின் இலக்கை எட்டுவதற்கு விடுதலைப் புலிகள் முயல்வதாகவும் புலனாய்வுப் பிரிவினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமக்குப் போதிய பாதுகாப்பு வழங்குமாறு உரியவர்களிடம் எழுத்து மூலம் கோரிக்கை விடுத்துள்ள போதிலும், இதுவரை உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என்று சிறைச்சாலை ஆணையாளர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஓகஸ்ட் 12இல் புலமைப் பரிசில் பரீட்சை

கொழும்பு —

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 12 ஆம் திகதி நடைபெறுமென பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்க தெரிவித்தார்.

இந்தமுறை புலமைப் பரிசில் பரீட்சைக்காக 3 இலட்சத்து 50 ஆயிரம் மாணவர்கள் தோற்றவுள்ளனர். புலமைப் பரிசில் பரீட்சைக்கு மறுநாள் ஓகஸ்ட் 13 ஆம் திகதி தகவல் தொழில்நுட்ப பரீட்சை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அதற்கு ஒரு லட்சம் மாணவர்கள் தோற்றவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (தே)

# சுகாதார அமைச்சுக்குள் பிரவேசித்த யுவதி கைது!

கொழும்பு —

நேர்முகப்பரீட்சைக்குரிய போலியான கடிதத்தைத் தயாரித்துக் கொண்டு சுகாதார அமைச்சுக்குள் நுழைந்த மட்டக்களப்பைச் சேர்ந்த தமிழ் யுவதி ஒருவர் அமைச்சு பாதுகாப்பு பிரிவு அதிகாரிகளால் கடந்த திங்கட்கிழமை நண்பகல் கைதுசெய்யப்பட்டார்.

இந்தயுவதி அமைச்சுக்குள் சென்று, தான் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டதாக அமைச்சின் வரவேற்பு உத்தியோகத்தரிடம் போலியான அழைப்புக் கடிதத்தை சமர்ப்பித்ததாக மருதானைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவரது நடத்தையில் ஏற்பட்ட சந்தேகத்தையடுத்து அமைச்சக பாதுகாப்பு பிரிவுகளுக்கு அறிவிக்கப்பட்டதாகவும், அவர்களின் விசாரணையை அடுத்து குறித்த யுவதி மருதானை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

சந்தேக நபரிடமிருந்த கடிதம் சுகாதார அமைச்சால் அனுப்பப்பட்ட கடிதம் இல்லையெனவும், இந்தக் கடிதத்தில் உயரதிகாரி ஒருவர் கையொப்பமிட்டிருந்தும் அவ்வாறான அதிகாரி ஒருவர் அமைச்சில் இல்லையென்றும் தெரியவந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட பெண் மட்டக்களப்பு மருத்துவமனை தாதியர் விடுதியின் பெண் மேற்பார்வையாளர் என கூறியுள்ளமையால் அது குறித்து விசாரணை நடைபெறுவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (தே)

# சுற்றுலா சபைத் தலைவரிடம் ஏழு மணிநேரம் விசாரணை

கொழும்பு —

சுற்றுலாப் பயண சபையின் தலைவர் உதய நாணயக்காரவிடம் லஞ்ச ஊழல் தடுப்பு ஆணைக்குழு அதிகாரிகள் ஏழு மணிநேரம் விசாரணைகளை நடத்தினர். அவருக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள ஊழல் மோசடிகள் குறித்து லஞ்ச ஊழல் ஆணைக்குழு அதிகாரிகள் கடந்த செவ்வாய்க்கிழமை 7 மணிநேரத்துக்கும் அதிகமாக விசாரணை நடத்தினர்.

ஆணைக்குழுவால் அறிவிக்கப்பட்டமைக்கு அமைய கடந்த செவ்வாய்க்கிழமை உதய நாணயக்கார லஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் முன் ஆஜரானார்.

இதற்கு முன்னரே அவரிடம் லஞ்ச ஊழல் ஆணைக்குழுவானது வாக்குமூலங்களைப் பதிவு செய்வதற்கு தயாரான போதும் அவர் சுகயீனமடைந்தமையால் அவரிடம் வாக்குமூலம் பெறமுடியாது போனதாக தெரிவிக்கப்பட்டது.

சில நாட்களுக்கு முன்னர் உதய நாணயக்கார லண்டன் பயணமாகவிருந்தபோதும் லஞ்ச ஊழல் ஆணைக்குழுவினரின் அறிவிப்பால் விமான நிலைய அதிகாரிகள் அவரின் பயணத்துக்கு அனுமதி மறுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கோட்டை ரயில் நிலையம் முன் ஊடகவியலாளர் ஆர்ப்பாட்டம்

கொழும்பு —

ஊடகவியலாளர் சம்பத் லக்மல் டி சில்வா கொலை செய்யப்பட்டமை யைக் கண்டித்து கோட்டை ரயில் நிலையத்தில் ஆர்ப்பாட்டம் நடத்தப்படவுள்ளது.

இவர் கடத்திச் செல்லப்பட்டு, கொலை செய்யப்பட்டமை தொடர்பாக இராணுவப் புலனாய்வுத்துறை அதிகாரிகளிடமிருந்து சாட்சியங்கள் பெறப்படவுள்ளன.

சம்பவம் நடைபெற்ற தினம் ஊடகவியலாளருடன் இறுதியாகக் தொலைபேசியில் தொடர்பு கொண்டவர் புலனாய்வுத்துறையைச் சேர்ந்தவர் என விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளதாகக் கல்கிசை குற்றப்புலனாய்வு பொலிஸார் தெரிவித்தனர்.

# தமிழ்ச்செல்வனின் கருத்தை முக்கிய விடயமாக கருதுகிறோம்

## கண்காணிப்புக்குழு தெரிவிப்பு



கொழும்பு —

ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம்வகிக்கும் நோர்டிக் நாடுகளின் கண்காணிப்பாளர்கள் செப்ரெம்பர் முதலாம் திகதிக்கு முன்னர் வெளியேற வேண்டும் என்று விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ள கருத்தை தீவிரமாகவும், முக்கியமான விடயமாகவும் கருதுவதாக கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் தோஃபினூர் ஓமர்ஸன் தெரிவித்தார்.

வெளிநாட்டு செய்திச் சேவை ஒன்றுக்கு பேட்டியளித்துள்ள தமிழ்ச் செல்வன்- ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் நாடுகளான டென்மார்க், பின்லாந்து, சுவீடன் ஆகியவற்றின் கண்காணிப்பாளர்கள் செப்ரெம்பர் முதலாம் திகதிக்கு முன்வெளியேற வேண்டும் என்று தெரிவித்தமை குறித்தே கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் இவ்வாறு தெரிவித்தார்.

# தீர்வுத்திட்டத்தை உருவாக்குவதற்கு பன்னிரெண்டு பேர் கொண்ட குழு!



கொழும்பு —

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான தீர்வுத் திட்டத்தை உருவாக்குவதற்கு 12 பேர் கொண்ட குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் கெகலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் ஊடகவியலாளர்களிடம் அவர் கூறியதாவது -

போர்நிறுத்த ஒப்பந்தமானது - ஒரு தரப்புடன் மட்டுமே தொடர்புடையது அல்ல. அதனால் ஒரு தரப்பின் கோரிக்கைக்கு அமைய கண்காணிப்புப் பணிகளிலிருந்து ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் நீக்கப்படமாட்டார்கள் என நோர்வே தெரிவித்துள்ளது.

இலங்கையில் சமாதான செயற்பாடுகளிலிருந்து நோர்வே விலகாது, தொடர்ந்தும் அனுசரணையாளர்கள் பணியில் அந்த நாடு ஈடுபடும். கண்காணிப்புக் குழுவில் ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் தொடர்ந்தும் இருக்க வேண்டும் என்பதே அரசாங்கத்தின் நிலைப்பாடு.

கண்காணிப்புக் குழுவிலிருந்து ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் நீக்கப்படமாட்டார்கள் என நோர்வே அறிவித்துள்ளது. அத்துடன், கண்காணிப்பாளர்கள் பற்றி முடிவெடுப்பதற்காக நடைபெறவுள்ள கூட்டமானது திட்டமிட்டபடியே நடைபெறும்.

சமாதான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான செயற்பாடுகளில் அரசாங்கம் தொடர்ந்தும் ஈடுபட்டுள்ளது. இதுவரை 6 சர்வகட்சி மாநாடுகள் நடைபெற்றன. இறுதித் தீர்வு பற்றிய கட்டமைப்பை உருவாக்குவதற்காக அனைத்து கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

அது தவிர ஜனாதிபதியால் 12 கல்விமான்கள் மற்றும் முக்கிய பிரமுகர்களைக் கொண்ட பல்லினக் குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவானது - எதிர்வரும் செவ்வாய்க்கிழமை மகிந்த தலைமையில் கூடி உகந்த தீர்வுத்திட்டங்களைக் கொண்ட கட்டமைப்பு குறித்து உரையாடும்.

சர்வகட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் குழுவால் முன்வைக்கப்படும் ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகளை இந்தக் குழு ஆராயும். எல்லையோரக் கிராமங்களை பாதுகாப்பதற்காக ஜாதிக சவிய எனும் திட்டமொன்றும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

அனுராதபுரம், பொலநறுவ, அம்பாறை, திருகோணமலை, மொனராகலை, மன்னார், புத்தளம், மட்டக்களப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய வகையில் மேற்கொள்ளப்படும் இந்தத் திட்டத்துக்கு அந்தந்த மாகாண அமைச்சர்கள் பொறுப்பாக இருப்பார்கள்.

பேசாலைச் சம்பவம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அறிக்கைகள் சட்டமா அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. இராணுவ மேஜர் ஜெனரல் ஒருவரால் தனியான விசாரணைகளும் நடத்தப்பட்டு வருகின்றன.

பாடசாலைகளில் குண்டுகள் வைக்கப்பட்டிருப்பதாக கடந்தவாரம் வதந்தி பரப்பியமை தொடர்பாக இதுவரை 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் அநேகர் ஒரே பிரதேசத்தை சேர்ந்தவர்கள். ஜூன் மாதம் 28 ஆம் திகதி முதல் இன்று வரை வடக்கு - கிழக்கில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன், 22 பேர் காயமடைந்தனர். இராணுவத்தினரின் பதில் தாக்குதலில் 5 விடுதலைப் புலி உறுப்பினர்கள் கொல்லப் பட்டனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

# ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டத்துக்கு கரும்புலிகள் வழிகாட்டியாய் உள்ளனர்

## யோகரட்ணம் யோகி தெரிவிப்பு

கிளிநொச்சி

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் தனி மனிதர்களால் மேற் கொள்ளப்பட்ட அருஞ்செயல்கள் எண் ணில் அடங்காதவை, பல வெளியே தெரியாதவை என்று தமிழீழ விடு தலைப் புலிகளின் மூத்த உறுப்பின ரும், வரலாற்றுத்துறைப் பொறுப்பாள ருமான யோகரட்ணம் யோகி தெரி வித்தார்.

கரும்புலிகள் நாளையொட்டி புலி களின் குரலில் அவர் ஆற்றிய உரை யில் மேலும் தெரிவித்ததாவது -

கரும்புலிகளை நினைவு கூரும் இந்நாள் - அவர்களது தேசபக்தியும், வீர உணர்வும் எமது மக்களின் மனதில் ஆழமாக ஊடுருவியுள்ளது என்பதை வெளிப்படுத்தும் நாள்.

தேசியத் தலைவர் குறிப்பிட்டது போல -

இக்கட்டான சூழலில் எழுந்த தடைகளைத் தகர்த்து விடுதலைப் போரை அடுத்த கட்டத்துக்கு நகர்த்தி யவர்களின் நாள். எந்தத் தடையும் எம்மால் தாண்டக்கூடியதே என்பதை உலகுக்கு உணர்த்திய நாள்.

கரும்புலி வீரர்களின் அதி உயர் தற்கொடையையும், வீரத்தையும் அவர்களின் ஆச்சரியமூட்டும் ஆன்ம பலத்தையும் நிறைவேற்றும் நாள். அவர்களின் குறி, இலக்கை நிறை வேற்றாது ஓயோம் என எல்லோரும் உறுதி எடுக்கும் நாள்.

1987 ஜூலை 5 ஆம் திகதி முத லாவது கரும்புலித் தாக்குதல் நடை பெற்றது. இன்று வரை 273 கரும்புலி கள் வீரச்சாவைச் சந்தித்துள்ளனர்.

உலகின் போராட்ட வரலாற்றில் பல நாடுகள் தற்கொடையாளர்களைப் பயன்படுத்தி இருக்கின்றன. இருந்த போதும் ஒப்பீட்டளவில் கரும்புலி களின் தாக்குதல் தாக்கமிக்கது, மிகத் துல்லியமானது, வியக்கத்தக்கது. அவர்களின் தாக்குதல் ஏற்படுத்திய மாற்றங்கள் அளப்பரியது.

இதனால் பல உலக நாடுகள் கரும் புலிகளைக் கண்டு அஞ்சுகின்றன. கரும்புலிகளின் எடுத்துக்காட்டுகள் ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டங் களுக்கு வழிகாட்டியாக அமைந்து விடும் என்று பதறுகின்றன. பொது வில் தாம் கண்டு அஞ்சுபவற்றை - தம்மால் இலகுவில் அடக்கவே முடியாதவற்றை, கொச்சைப்படுத்தி இழிவுபடுத்தி உலக மக்களின் மூளையை சலவை செய்து - அவ் வாறானவற்றுக்கு எதிரான கருத்து களை அவர்கள் மனதில் விதைப் பதையே பல நாடுகள் செய்து வரு கின்றன.

அவர்களின் நாடகத்துள் நடிகர் களாகி அவர்கள் கூறும் பிழையான தகவல்களையே உயர் விழுமியங் களாக ஏற்றுப் பேசும் மூடர்கள் உல கில் ஏராளம் ஏராளம்.

போர் என்பது வன்முறையே. அதில் மென்முறை என்பது எதுவுமே இல்லை.

கிரேக்கத் தத்துவஞானி அரிஸ் டோட்டில் மனிதனை அரசியல் மிரு கம் என்றார். ரஷ்ய போரியல் கோட் பாட்டாளர் கோஸ்மிச் மனிதனை போரிடும் மிருகம் என்றார். ஆனால் தற்கால போரியல் ஆய்வாளரான கீகன் மனிதனை சிந்தித்து வேட்டை யாடும் பண்பாட்டு மிருகம் என்றார்.

மனிதம் குறித்து பேசும் நாடுக ளின் உயர் விழுமிய வளர்ச்சியின் போது கொல்லப்பட்டோரின் வரலாறு முழுமையாக எழுதவில்லை. வல் லரசுகளாக மாறிய பின்னர் தமது நிலைகளைத் தக்கவைக்க அவர் களின் கொலைகளை முழுமையாகக் கூறப்படவில்லை.

அவை பேசும் உயர் விழுமியங் கள் சிக்கல் வரும் போது கடைப்பிடிக் கப்படுவதில்லை. இதுவே உலக நியதி.

குண்டு செய்யப்பட்டதே மனி தனை வெடிக்க வைக்கத்தானே அதாவது அழிக்கத்தானே. ஆனால், மனிதன் மட்டும் குண்டாய் வெடித் தால் நியாயமில்லை. ஏன் இந்த அறம்?

தேசியத் தலைவர் குறிப்பிட் டது போல் இந்த மனோபலத்தை உலகின் எந்த ஆயுதங்களாலும், எந்தத் தொழில் நுட்பத்தாலும் தடுக்க முடியாது. எந்த அரசு இயந்திரத்தா லும் அடக்க முடியாது.

அதனால் தான் நியாயமில்லை என்ற கூச்சல்.

பிரெஞ்சுப் படைகளால் கைது செய்யப்பட்ட அல்ஜீரிய புரட்சிப் புலி களின் தலைவர்களில் ஒருவரான பென் எம் கிண்டியிடம் தேசப்பற்று மிகுந்தவர்கள் போல் இருந்த பிரெஞ் சுப் பத்திரிகையாளர் ஒருவர் பெண் களின் கைப்பைகளிலும், கூடைகளி லும் வெடி பொருட்களை வைத்து பல சாதாரண மக்களைக் கொல்வது கோழைத்தனம் இல்லையா என்று கேட்டார்.

அதற்கு அவர் பதிலளிக்கையில் நேபாம் குண்டுகளை சிற்றூர்கள் மீது வீசி சாதாரண பொது மக்களை கொல்வது கோழைத்தனமாகத் தெரியவில்லையா எனக் கேட்டார். நீங்கள் குண்டு வீசும் பணியை எங் களிடம் தந்தால், உங்கள் பணி சுலப மாகிவிடும் என்றும், நீங்கள் உங்கள் குண்டு வீச்சுகளைத் தாருங்கள். உங்களிடம் எங்களது கைப்பை களையும், கூடைகளையும் தருகி றோம் என்றார்.

இந்த எடுத்துக் காட்டு கரும் புலிகளுக்குப் பொருந்தாது என்ற போதும் கூச்சலிடும் உலக நாடுக ளின் பொய் முகத்தை கிழித்துக் காட்ட கூறினோம்.

போரியல் இறுக்கமான முனை மீது ஒருமுகப்பட்ட படைத்திறனைப் பயன்படுத்தி வெற்றி காணவேண் டும் என்பது ஒரு பால பாடம். இதற்கு மிகுந்த பட்டறிவுத் துணிவு, தீர்க்க மான பார்வை வேண்டும்.

தேசியத் தலைவர் குறிப்பிட்டது போல் குறைந்த இழப்போடு- பெரும் படையின் தீர்க்கமான முனைகளை, இலக்குகளை அடையாளம் கண்டு அவற்றைத் தாக்கி அழிப்பதற்காக இரவு - பகல் பாராது உழைத்து உயரிய மனோபலத்தோடு அவற் றைத் தாக்கி அழித்து எம்போராட்டத் தில் பல வெற்றிகளை ஈட்டித் தந்த வர்கள் கரும்புலிகளே.

இவர்களுக்கு சளைக்காதவர்க ளாக வேவுப்புலிகளும் பணிபுரிந் துள்ளனர் என்பதை இங்கே சுட்டிக் காட்டுதல் இன்றியமையாததாகும். சேவை மேற்கொள்ளும் புலிகளுக்கு, கரும்புலிகளைப் போல் சாவின் சரியான நேரம் தெரியாது. ஆனால் அவர்களைப் பொறுத்தவரை எந்த வினாடியும் சாவுக்குரியதே. இவர்க ளின் அருஞ் செயல்கள் எமது போராட் டத்தை பெரிய அளவுக்கு முன்னெடுத் துச் செல்ல உதவியிருக்கின்றன.

சில வேளைகளில் உணவின்றி, நீரின்றி சாதாரண உடல் உபாதை களை அடக்கி, பாம்புகள், பூச்சிகள் எனபல இடர்களை எதிர்கொண்டு இர வைப் பகலாக்கி அவர்கள் பெறும் தகவல்கள் பெறுமதியானவை.

கரும்புலிகளின் வெளிவராத அருஞ்செயல்களைப் போல் இவர் களின் அருஞ்செயல்களும் இரகசி யம் பேணல் என்ற கட்டுக்கோப்பில் மூடிவைக்கப்பட்டுள்ளது.

அதற்குரிய காரணம் ஆழமா னது. அதைப் புரிந்து கொள்ள தமிழீழ வரலாற்றை மீள்பார்வை செய்து கொள்வது மிகவும் அவசியமானது.

இலங்கையானது சிங்கள பௌத் தர்களுக்கே உரியது என்பது சிங்கள பௌத்தர்களின் முடிவு. நாடு, மொழி, மதம் எல்லாம் சிங்களவருக்கானது அதன் உச்ச வடிவமே 1972, 1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்புகளாகும்.

தமிழர்களைப் பொறுத்தவரை சிங்கள தேசத்தோடு பேசிப் பயனி ல்லை, மோதினாலே பயன் என்று கருதி அதனால் எழுந்த ஆயுதப் போராட்டம் ஏறத்தாழ 30 ஆண்டு காலமாக தொடர்கிறது.

ஆயுதமேந்திய பின்னரே தமிழர் கள் பலவற்றைச் சாதித்தனர். ஒரு மதவெறி பிடித்த சிங்களத்தை அடக்க ஒரே ஒரு வழி படைக்கலன் ஏந்திப் போராடுவது தான் என்பது தமிழர் கள் எல்லோருக்கும் தெரிந்தது. மிகச் சிறிய தேசிய இனமானது பெரிய தொரு இனத்துக்கு எதிராக, அதற்கு ஆதரவு தரும் உலக நாடுகளுக்கு எதிராக வெல்ல வேண்டுமாயின் படைக் கலன்களுக்கு அப்பால் தேசப் பற்றிலும், கட்டுடை உணர்விலும் சிற ந்து விளங்க வேண்டும் என்பது எல் லோருக்கும் தெரிந்த உண்மையே.

ஒரு தனிமனித முயற்சியால் தன்னுடன் வாழும் வீரர்களின் உயிரை, தமிழீழ மக்களின் உயிரை, தமிழீழத்தின் தளையை உடைக்க லாம் என்ற தன்னலமற்ற பொது நலம் தான் தற்கொடையாளர்களை, வேவு வீரர்களை அவர்களைப் போல் பல வீரர்களை உருவாக்குகிறது.

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் தனி மனிதர்களால் மேற்கொள்ளப்பட்ட அருஞ்செயல்கள் எண்ணிலடங்காதவை. பல வெளியே தெரியாதவை.

கரும்புலிகள் தங்களது பயிற் சியை எப்படி மேற்கொள்கிறார்கள் என்பது வெளி உலகுக்குத் தெரியாது. அப்போது அவர்கள் வாழும் வாழ் க்கை, அவர்களின் எண்ணங்கள் என்பன குறித்து அறிய வரும் போது, அவர்களுள் இருக்கும் மனிதம் குறி த்து அறியும்போது உலகம் உறை ந்து போகும்.

தமிழர்களின் நவீன வரலாற் றில் இது வீரர்களின் காலம் - சாதிக் கும் காலம், தொன்மைமிகு தமிழி னத்தின் பெருமையை உலகு அறி யும் காலம்.

கரும்புலிகளின் அருஞ்செயல் கள் குறித்து தகவல்கள் வெளிவர வில்லை. தமிழீழம் விடுதலை பெறும் போதே அவை வெளிவரும். அப்போது கரும்புலிகள் குறித்து இப்போது நாம் அறிந்தவை கடலில் மிதக்கும் பனிப்பாறையில் வெளியே தெரியும் சிறு பகுதி என்பதை நாம் அறிவோம்.

கரும்புலிகளைப் போற்றுவோம்! அவர்களின் குறி இலக்காம் தமிழீழ விடுதலை பெற ஒன்றிணைந்து போராடுவோம்! வெற்றி நமதே! என்றார்.



கரும்புலிகள் நாள் நிகழ்வின் போது த்மிழீழ காவற்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் கரும்புலிகளின் படத்துக்கு மலர் மாலை அணிவிப்பதைப் படத்தில் காணலாம்.

## மீன்பிடித் தடையை அடுத்து தமிழகம் செல்லும் மக்கள்

கிளிநொச்சி

மன்னார் - பேசாலை கடற்பகுதி யில் கடற்படையினர் மீன்பிடித் தொழி லுக்குத் தடை விதித்துள்ளமையால் அந்தப் பகுதி மக்கள் தமிழகத்துக்கு அகதிகளாகச் செல்கின்றனர்.

இதன்படி கடந்த செவ்வாய்க் கிழமை பேசாலையைச் சேர்ந்த 55 பேர் இந்திய இழுவைப் படகுகள் மூலம் தமிழகத்துக்கு அகதிகளாகச் சென்றனர்.

மீன்பிடித் தொழிலை இழந்துள்ள மீனவக் குடும்பங்களுக்கு இரண்டு வார கால உலர் உணவு நிவாரணம் வழங்கப்பட்ட போதிலும் - அது அவர் களின் வாழ்வாதாரத்துக்கு போது மானதாக இல்லாததனாலேயே அவர்கள் இடம் பெயர்வதற்கு காரண மென பேசாலை பங்குத் தந்தை வின்சன் பற்றிக் தெரிவித்தார்.

தொழிலின்மையும், பசியுமே அவர்களை இடம் பெயர வைப்பதாக வும் எனவே அதிகரித்த நிவாரணத் தைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுத்து வருவதாகவும் தெரிவித் தார். (கு)

## கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு விளையாட்டுப் போட்டிகள்

கிளிநொச்சி

கரும்புலிகள் நாளை முன்னிட்டு கடற்புலிகளின் வடமராட்சி கிழக்குப் பிரதேச அரசியல்துறையினரால் வடமராட்சி கிழக்கில் பதிவு செய்யப் பட்ட 17 விளையாட்டு கழகங்களுக் கிடையிலான விளையாட்டுப் போட்டி கள் நடத்தப்பட்டன.

நடைபெற்று முடிவடைந்த உதை பந்தாட்டப் போட்டியில் கட்டைக்காடு சென்மேரிஸ் விளையாட்டுக்கழகம் முதலாவது இடத்தையும், வெற்றி லைக்கேணி செபஸ்தியர்விளையாட் டுக்கழகம் இரண்டாம் இடத்தையும் பெற்றன.

மென்பந்து கிரிக்கெட் போட்டியில் உடுத்துறை பாரதி விளையாட்டுக் கழகம் முதலாமிடத்தையும், ஆழிய வளை சக்திவேல் விளையாட்டுக் கழ கம் இரண்டாமிடத்தையும் பெற்றன.

நேற்று முன்தினம் சிறப்பு விளை யாட்டாக மரதன் ஓட்டப் போட்டி நடை பெற்றது. பெண்களுக்கான மரதன் ஓட்டப்போட்டியில் வத்திராயன், உதய சூரியன் விளையாட்டுக் கழகத் தைச் சேர்ந்த உதயபாசம் முதலா மிடத்தையும், வத்திராயன் உதயசூரி யன் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த த.கலைவினோதினி இரண் டாமிடத்தை யும் பெற்றனர்.

## கடலில் தூக்கி வீசப்பட்ட மீனவரின் சடலம் மீட்பு!

மன்னார்

மன்னார் - கரிசல் கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்த வேளை கடற்படையினரால் கைது செய்யப் பட்டு, கடலில் வீசப்பட்ட மீனவரின் சடலம் விடுதலைப் புலிகளின் கட்டுப் பாட்டுப் பகுதியான வலைப்பாட்டில் கரையொதுங்கியது.

பேசாலை கரிசலைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான ஆசீர் (வயது - 35) என்பவரே சடல மாக மீட்கப்பட்டார்.

கடந்த சனிக்கிழமை பேசாலை கடற்பரப்பில் தொழிலில் ஈடுபட்ட வேளை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இவர் பின்னர் கடலுக் குள் வீசப்பட்டார். நீந்தத் தெரியாது தத்தளித்த ஆர்சீக் பின்னர் காணா மல் போனார்.

நேற்றுமுன்தினம் காலை இவரது சடலம் விடுதலைப் புலிகளின் கட்டுப் பாட்டிலுள்ள வலைப்பாட்டில் கரை யொதுங்கியதை அடுத்து பேசாலை யிலிருந்து சென்ற மீனவர்கள் சட லத்தை எடுத்து வந்து மன்னார் வைத் திய சாலையில் ஒப்படைத்தனர்.

சடலத்திலிருந்த ஆடைகள், கை யில் ஒருவிரல் இல்லாமலிருந்தமை ஆகிய தடயங்களை வைத்து இது காணாமற்போன ஆசிக்கினுடைய சடலமென இனங்காணப்பட்டது.

மன்னார் மாவட்ட நீதிபதி ரி.ஜே. பிரபாகரன் சடலத்தை பார்வையிட்ட துடன் சடலம் தொடர்பான விசார ணைகளை நடத்தி சடலத்தை உற வினர்களிடம் ஒப்படைக்குமாறு உத் தரவிட்டதுடன் சம்பவம் தொடர் பான விசாரணைகளை நடத்து மாறு பொலிஸாருக்கு உத்தரவிட் டார். (கு.மோ)

## இரும்புக் குண்டுகள் வவுனியாவில் பறிமுதல்

வவுனியா

வவுனியாவில் பெருந்தொகை யான இரும்புக் குண்டுகளை பொலி ஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

குண்டுகளைத் தயாரிக்கப் பயன் படுத்தப்படும் சிறு இரும்புக்குண்டு கள் அடங்கிய 24, சாக்குப் பைகள், 77 ஆயிரம், பென்டோச் பற்றரிகள் என்பனவே கைப்பற்றப்பட்டன.

இரும்புக் குண்டுகள் அடங்கிய சாக்குப் பையின் நிறை நாற்பத்தி மூன்றரை கிலோவாகும். 24 சாக்குப் பைகளில் 5 லட்சத்து 11 ஆயிரத்து 560 இரும்புக் குண்டுகள் இருந்த தாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைப்பற்றப்பட்ட 188 பென்டோச் பற்றரி பெட்டிகளில் 77 ஆயிரத்து 200 பற்றரிகள் இருந்துள்ளன.

கொழும்பிலிருந்து கொண்டு செல் லப்பட்ட இந்தப் பொருட்கள் வவுனியா விலுள்ள களஞ்சியசாலையில் இறக் கப்பட்டுக் கொண்டிருந்த போது கைப் பற்றப்பட்டன. இது தொடர்பாக களஞ் சியசாலை உரிமையாளரும், இரு ஊழி யர்களும் கைது செய்யப்பட்டனர்.

கிளிநொச்சியைச் சேர்ந்த விம லன் என்பவர் வவுனியாவுக்கு வந்து இவற்றைக் கொண்டு செல்லவிருந்த தாக விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இவற்றை விமலன் என்பவரே கொழும்பில் வைத்துக் கொள்வனவு செய்ததாகவும், அவற்றை வவுனியா வுக்கு கொண்டு சென்று வைத்திருப் பதே தனக்கு அளிக்கப்பட்ட பொறுப்பு என்றும் களஞ்சியசாலை உரிமையா ளர் தெரிவித்தார். தடுப்புக்காவல் உத்தரவுக்கமைய சந்தேக நபர்கள் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.

# சிறுவர் உரிமை தொடர்பான விழிப்புணர்வு செயற்பாடுகள்

தென்மராட்சி —

தென்மராட்சியில் தெரிவு செய்யப்பட்ட பத்துக் கிராமங்களில் சிறுவர் உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை அறவழிப் போராட்டக் குழுவினர் நடத்தி வருகின்றனர்.

இந்தத் திட்டத்தின் முதல் நிகழ்வு அறவழி நிலைய இயக்குநர் எம். கே.ஜீவகதாஸ் தலைமையில் கடந்த சனிக்கிழமை நுணாவில் மேற்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் இடம்பெற்றது.

இதில் யாழ்.மாவட்ட சிறுவர் பாதுகாப்பு குழுவைச் சேர்ந்த எஸ். ஜெனிபட், கிராம அலுவலர் வை. துரைசிங்கம் ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

யுத்த அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் நலன்களைப் பேணும் வகையில் தெரிவுசெய்யப்பட்ட தொண்டர்கள் மூலம் சிறுவர் உரிமை தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்குகள், சிறுவர் கழகம், தாய்மார் கழகம் அமைத்தல், சிறுவர்களிடையேயான விளையாட்டுப் போட்டிகள் மற்றும் கலை, கலாசாரப் போட்டிகளை நடத்துதல், மரநடுகை, வீட்டுத்தோட்டம் அமைத்தல், விளையாட்டு உபகரணங்களை வழங்குதல் எனப் பல செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

நாவற்குழி மேற்கு, மட்டுவில் கிழக்கு, கைதடி, நுணாவில், கெற்பேலி, விடத்தற்பளை, தாவளை, இயற்றாலை, தவசிகுளம், மந்துவில் கிழக்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் சிறுவர் உரிமை தொடர்பான கருத்தரங்குகள் விரைவில் நடத்தப்படவுள்ளன.

இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு கனடா அபிவிருத்தி அமைப்பு (சீடா) நிதியுதவியையும், சர்வதேச பயிற்சி மன்றம் அனுசரணையையும் வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.



கைதடி வீரகத்திப் பிள்ளையார் ஆலயத்தில் 'திருஞான சம்பந்தர் குருபூசை தினம்' தென்மராட்சிப் பிரதேச இந்து கலாசார அபிவிருத்தி உதவியாளர் எஸ். மகிந்தினி தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் சைவப் புலவர் நித்திய தசிதரனை கைதடி சச்சிதானந்த ஆசிரம தலைவர் இ.குழந்தை வடிவேல் மலர்மாலை அணிவித்து கௌரவிப்பதைப் படத்தில் காணலாம். (82)

# முன்பள்ளி மாணவர்களின் பேச்சுத்திறன் காண் விழா

சண்டிலிப்பாய் —

சண்டிலிப்பாய் பிரதேச முன்பள்ளி மாணவர்களின் பேச்சுத்திறன் காண் விழா இன்று பிற்பகல் 2 மணிக்கு ஆனைக்கோட்டை தியாகசீலத்தில் நடைபெறவுள்ளது.

சண்டிலிப்பாய் முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத் தலைவர் த.ராஜ்குமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் - வலி.தென்மேற்கு பிரதேசசபை அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.கந்தசாமி பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.சிவநேயன், மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர் க.சற்குணலிங்கம், வலி. தென்மேற்கு பிரதேச சபை உள்ளூராட்சி உதவியாளர் ஜெயந்தா சோமராஜ், வலி.தென்மேற்கு பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் அனித்தா செல்வராசா, யேசு சபை அகதிகள் பணியக இணைப்பாளர் பி.சுகன்யா, வலிகாமம் முன்பள்ளி வலய இணைப்பாளர் கேமநளினி யோகேந்திரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும், யாழ். கடல் உணவு கொள்வனவாளர் ந.சிவசங்கர் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

# பாதிக்கப்பட்ட மக்களுக்கான சைக்கிள் வழங்கலில் பாரபட்சம்

மல்லாகம் —

மல்லாகம் கோணப்புலம் அகதி முகாமில் வாழும் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான சைக்கிள்கள் வழங்கும் திட்டத்தில் பாரபட்சம் காட்டப்படுவதாக அந்தப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட வடமராட்சி பகுதியைச் சேர்ந்த மக்கள் மல்லாகம் கோணப்புலம் முகாமில் அடிப்படை வசதிகள் குறைந்த நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

இந்த நிலையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான துவிச்சக்கரவண்டிகள் வழங்கும் திட்டத்தின் போது முன்னெப்போதோ கிறிஸ்தவ மதகுரு ஒருவர் 9 பிள்ளைகளுக்குத் துவிச்சக்கர வண்டிகளை வழங்கியதை காரணம் காட்டி - தற்போது வழங்கப்படும் துவிச்சக்கர வண்டிகளில் இந்த 9 பேரையும் தவிர ஏனையோருக்கே வழங்கப்படும் என அந்தப்பகுதி அரச அலுவலர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் தாம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், எனவே சம்பந்தப்பட்டவர்கள் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் பாதிக்கப்பட்டவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# அமைதிவேண்டி பஜனை வழிபாடு

யாழ்ப்பாணம் —

தற்போதைய அமைதியற்ற சூழல் நீங்கி. விரைவில் நீதியுடன் கூடிய சமாதானம் மலரவேண்டு மென்று "அமைதிக்கான இசை வேண்டுதல்" என்ற பஜனை வழிபாடு திருமறைக் கலாமன்றத்தால் ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்பட்டு வருகின்றது.

நாவாந்துறை, குருநகர், ஆனைக் கோட்டை, கொழும்புத்துறை உட்பட யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள ஆலயங்களில் இந்தப் பஜனை வழிபாடு தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றது.

# ஆன்மீக சொற்பொழிவு

யாழ்ப்பாணம் —

தொண்டமானாறு செல்வச் சந்நிதியான் ஆசிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையால் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடத்தப்பட்டு வரும் ஆன்மீக சொற்பொழிவுத் தொடரில் இன்று காலை 10.30 மணியளவில் 'ஔவையின் நூற்பயன்' எனும் விடயத்தில் செல்வி றம்யா ஆன்மீக சொற்பொழிவாற்றுவார்.

இந்த நிகழ்வு பேரவையின் தலைவர் க.அருள்லிங்கம் தலைமையில் இடம்பெறும்.

# புனரமைக்கப்பட்ட கட்டடம் திறப்பு

சாவகச்சேரி —

இடநெருக்கடியைக் கருத்தில் கொண்டு விஸ்தரிக்கப்பட்ட சாவகச்சேரி நகரசபையின் அலுவலகம் இன்று காலை திறந்து வைக்கப்படவுள்ளது.

கடந்த கால யுத்த அனர்த்தங்களால் சாவகச்சேரி நகரசபை மற்றும் பொது நூலகக் கட்டடங்கள் என்பன பலத்த சேதமடைந்தன.

இந்தக் கட்டடங்கள் ஐம்பது இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு இயங்கி வரும் நிலையில் - அலுவலகத்தில் ஏற்பட்டுள் இட நெருக்கடியை அடுத்து மாடிக் கட்டடத்தின் தளப்பகுதி புனரமைக்கப்பட்டது. வட - கிழக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தின் நிதி ஒதுக்கீட்டிலேயே இந்தக் கட்டடம் புனரமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# விலங்கு விசர்நோய் தடை மருந்தை ஏற்றிக் கொள்ளலாமென அறிவிப்பு

யாழ்ப்பாணம் —

அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையில் விலங்கு விசர் நோய் தடை மருந்தை ஏற்றிக்கொள்ளலாமென வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டொக்டர் எஸ்.விமலேந்திரன் அறிவித்துள்ளார்.

அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையில் இந்த மருந்தைப் பயன்படுத்துவதற்கான அனுமதி கிடைத்ததை அடுத்தே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்படி விசர்நாய்க் கடி மற்றும் விலங்குகளால் கடியுண்ட நோயாளர்கள் அச்சுவேலி அரசினர் மருத்துவமனையில் மருந்தை ஏற்றிக் கொள்ளமுடியும்.

அச்சுவேலிப் பகுதி நோயாளர்கள் இதுவரை காலமும் யாழ். போதனா வைத்தியசாலையிலேயே விலங்கு விசர்நோய் தடை மருந்தை ஏற்றி வந்தனர். தற்போது அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையில் இந்த மருந்தை ஏற்றக்கூடிய வசதி கிடைத்ததையிட்டு அவர்கள் பெரிதும் நன்மையடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை ஒன்று




பெயர் : வி.விதுசன்
முகவரி : உரும்பிராய்.

அகவை ஒன்பது



பெயர் : உ.ஜென்சன்
முகவரி : தில்லையம்பதி.

## வாழ்க வளமுடன்




# பரீட்சையில் தோற்ற அனுமதிக்காத அதிபருக்கு எதிராக முறைப்பாடு

யாழ்ப்பாணம் —

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு மாணவர் ஒருவருக்கு அனுமதி மறுத்த பாடசாலை அதிபர் ஒருவருக்கு எதிராகப் பாதிக்கப்பட்ட மாணவனால் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ். நகரப் பகுதியிலுள்ள பாடசாலை ஒன்றில் கல்வி கற்று முதலாம் தடவை க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றி 5 பாடங்கள் சித்தியடைந்து மீண்டும் இரண்டாவது தடவையாக பாடசாலை ஊடாக 2006 ஆம் ஆண்டு மார்கழி மாதம் பரீட்சையில் தோற்றுவதற்காக விண்ணப்பிக்கச் சென்றபோது பாடசாலை அதிபர் தோற்றுவதற்கு அனுமதிக்க முடியாது எனத் தெரிவித்ததாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து பாதிக்கப்பட்ட மாணவனால் இந்தப் பாடசாலை அதிபருக்கு எதிராக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

# முதுமாணிக் கற்கை நெறிகள் 15 ஆம் திகதி முதல் ஆரம்பம்

யாழ்ப்பாணம் —

குடித்தொகைஅபிவிருத்தி கற்கை நெறிக்கான முதுமாணிக் கற்கை நெறி விரிவுரைகள் எதிர்வரும் 15 ஆம் திகதி காலை 8 மணிக்கு யாழ். பல்கலைக்கழகத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இந்தக் கற்கை நெறிக்கு அனுமதி பெற்றுள்ளவர்களை அன்றைய தினம் குறித்த நேரத்துக்குச் சமூகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

அத்துடன் இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த அபிவிருத்தி கற்கை நெறிக்கான முதுமாணிக் கற்கை நெறி, பிரதேச திட்டமிடலுக்கான முதுமாணிக் கற்கைநெறி, தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூலமான கல்வியியல் முதுமாணிக் கற்கைநெறி, நூலக தகவல் விஞ்ஞானத்துக்கான பட்டப்பின் டிப்ளோமா கற்கைநெறி ஆகியவற்றுக்கான விரிவுரைகளும் நாளை தொடக்கம் வழமையான நேர அட்டவணைப்படி நடைபெறுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# குருபூசை தினத்தை முன்னிட்டு பேச்சுப் போட்டி நடத்த ஏற்பாடு

வடமராட்சி —

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையால் மயில்வாகன சுவாமிகளின் 21 ஆவது குரு பூசையை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே பேச்சுப் போட்டிகளை நடத்தவுள்ளது.

தரம் 6 முதல் 7 வரை முதலாவது பிரிவு - தரம் 8 முதல் 9 வரை இரண்டாவது பிரிவு - தரம் 10 முதல் 11 வரை மூன்றாவது பிரிவு என மூன்று பிரிவுகளாக நடத்தப்படவுள்ள இந்தப் பேச்சுப் போட்டி எதிர்வரும் 30 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

போட்டியில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் கல்வி கற்கும் தரம், வயது என்பவற்றைப் பாடசாலை அதிபர் அல்லது பெற்றோரால் உறுதிப்படுத்தி - விண்ணப்பங்களை இந்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன்பாக சந்நிதியான் ஆசிரமம், தொண்டமானாறு என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இந்தப் பேச்சுப் போட்டியில் வெற்றி பெறும் மாணவர்களுக்கான பரிசில்கள் - அடுத்த மாதம் முதலாம் திகதி நடைபெறும் மயில்வாகன சுவாமிகளின் குரு பூசைதின நிகழ்வில் வழங்கப்படும்.

# ஊர்காவற்துறையிலும் மத்தியஸ்தர் சபை அமைப்பு

யாழ்ப்பாணம் —

கிராம மட்டத்தில் ஏற்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் ஊர்காவற்துறையில் 12 பேரைக் கொண்ட மத்தியஸ்தர் சபையொன்று அமைக்கப்பட்டுள்ளது.

எனவே கிராம மட்டத்தில் ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பாக மத்தியஸ்தர் சபையிடம் முறைப்பாடு செய்யலாமென அதன் தவிசாளர் எம்.எப்.அல்பேட் தெரிவித்தார். இந்தப் பிரச்சினைகள் தொடர்பாக மத்தியஸ்தர் சபையிடம் முறைப்பாடு செய்தால், குறித்த தரப்பினருடன் அணுகி பிரச்சினை தொடர்பாக கலந்து பேசி நியாயமான முறையில் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுத் தரமுடியும்.

பிரச்சினைகள் குறித்து மத்தியஸ்தர்சபை உறுப்பினர்கள் அல்லது தவிசாளர் மூலமாக நேரடியாக குறைகளைத் தெரிவிக்கலாமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கோட்டக்கல்வி அதிகாரியாக நியமனம்

யாழ்ப்பாணம் —

வல்லை சிவகுரு வித்தியாசாலையின் அதிபராக பதவி வகித்த த.தபேந்திரராஜா மருதங்கேணி கோட்டக் கல்வி அதிகாரியாக வடக்கு - கிழக்கு மாகாண கல்வியமைச்சால் நியமிக்கப்பட்டுள்ளார். இதனையடுத்து அவர் கடந்த 26 ஆம் திகதி தனது பதவியைப் பொறுப்பேற்றார்.

மருதங்கேணி கோட்டக்கல்வி அதிகாரியான இரகுநாதன் பருத்தித்துறை கோட்டக்கல்வி அதிகாரியாக மாற்றம் பெற்றதை அடுத்தே த.தபேந்திரராஜாவுக்கு இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

# இலங்கை இனப் பிரச்சினையிலிருந்து இந்தியா முற்றாக விலகி நிற்க முடியாது

## தினமணி நாளேடு தெரிவிப்பு

சென்னை —

இலங்கைப் பிரச்சினையிலிருந்து இந்தியா முற்றாக விலகி நின்றுவிட முடியாது என்று தமிழ்நாட்டிலிருந்து வெளியாகும் 'தினமணி' நாளேடு தெரிவித்தது.

இது தொடர்பாக அது தனது ஆசிரியர் தலையங்கத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது -

இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடைபெற்று வந்த பேச்சுவார்த்தை தடைப்பட்டு நிற்கும் சூழ்நிலையில் - இலங்கையில் அண்மைக்காலமாக வன்முறை வெடித்துள்ளது. அவ்வப்போது நடந்து வரும் மோதல்கள் காரணமாக இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கும், இலங்கை இராணுவத்துக்கும் இடையே முழு அளவிலான போர் ஏற்பட்டுவிடுமோ என்ற பதற்ற நிலை உருவாகியுள்ளது.

இதற்கிடையே தற்போதைய அசாதாரண சூழ்நிலை காரணமாக இலங்கையின் வட- கிழக்குப் பகுதிகளிலிருந்து தங்களது உயிரைக் காத்து கொள்வதற்காக இலங்கைத் தமிழர்கள் அகதிகளாகத் தமிழகம் வரும் கட்டாயத்துக்கு ஆளாகியுள்ளனர்.

இலங்கையில் தற்போதைய வன்முறை மிகுந்த சூழ்நிலைக்கும், அறிவிக்கப்படாத போர்ச் சூழலுக்கும் முழுக்காரணம் இலங்கை ஜனாதிபதியே என்று விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் குற்றம்சாட்டியுள்ளார். பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனிடம் நேரில் பேசத் தயாராக உள்ளதாக இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தமிழர்கள், சிங்களவர்கள், முஸ்லிம் பிரதிநிதிகள், வழக்கறிஞர்கள், புத்திஜீவிகள் அடங்கிய நிபுணர் குழுவினர் மூலம் அமைதிக்கான நகல் செயல் திட்டத்தை உருவாக்க முயற்சிகள் நடந்து வருவதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். எனினும், நோர்வே அரசின் முயற்சியில் ஏற்கனவே, நடைபெற்று வந்த இரதரப்புப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் தொடராத நிலையில் - இலங்கையில் அமைதி என்பது எட்டும் தூரத்தில் இல்லை என்பதே நிபுணர்களின் கருத்து.

கடந்த மாதத்தில் இலங்கை வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர புதுடெல்கி வந்ததன் தொடர்ச்சியாக இந்திய வெளியுறவுச் செயலாளர் சியாம் சரண் இலங்கை சென்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளார்.

இலங்கையின் இறையாண்மையையும், ஒருமைப்பாட்டையும் கட்டிக்காக்க வேண்டும் என்பதில் இந்தியா உறுதியுடன் இருப்பது குறித்த பிரதமர் மன்மோகன் சிங்கின் செய்தியைத் தெரிவித்துள்ளார்.

இந்த இரண்டு நாள் சுற்றுப் பயணத்தின் முடிவில் நிருபர்களிடம் பேசிய சியாம் சரண் - இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே போர் நிறுதத ஒப்பந்தத்தைச் செயற்படுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தையும், மீண்டும் அரசியல் ரீதியான பேச்சுவார்த்தையைத் தொடங்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கைப் பிரச்சினையில் ஏற்கனவே நேரடியாகத் தலையிட்டு கையைச் சுட்டுக் கொண்ட இந்திய அரசு - தற்போதைய சூழ்நிலையில் நேரடியாகத் தலையிடாது என எதிர் பார்க்கப்படுகிறது. எனினும், இலங்கை பிரச்சினையிலிருந்து முற்றாகவும் இந்தியா விலகி நின்றுவிட முடியாது.

இலங்கையில் மீண்டும் வன்முறைக் கலவரங்கள் தொடர்ந்தால் இந்தியாவுக்கு வரும் அகதிகள் பிரச்சினையைச் சமாளித்தாக வேண்டிய பொறுப்பு மத்திய அரசுக்குள்ளது என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

அங்கு வன்முறைக் கலவரங்களுக்கு முடிவு கட்டி அமைதி ஏற்படுத்த வேண்டும் என்பதில் இந்தியாவின் தீவிர அக்கறையை வெளியுறவுச் செயலர் சியாம் சரண் வெளிப்படுத்தியுள்ளார்.

அமைதிப் பேச்சுவார்த்தையை முன்னெடுத்துச் செல்லச் சாத்தியமானவற்றைச் செய்ய இந்தியா தயாராக இருப்பதாக அவர் கூறியுள்ள போதிலும், இலங்கை அரசுதான் அது குறித்து முடிவு செய்ய வேண்டும் என்று எச்சரிக்கை உணர்வுடன் கூறியிருப்பதையும் கவனிக்க வேண்டும்.

இலங்கையில் அமைதிப் பேச்சுவார்த்தை தொடர வேண்டும் என்பது இரு தரப்பினருக்கும் இடையே சமரசப் பேச்சுவார்த்தையில் ஈடுபடும் நாடுகளின் வேண்டுகோள் மட்டுமல்ல இந்தியா போன்ற அண்டை நாடுகளின் கருத்தும் அதுதான்.

எனவே, சமரசப் பேச்சுவார்த்தையைத் தொடங்குவதற்கு ஏற்ற சூழலை உருவாக்குவதில் இலங்கை அரசுக்கு மட்டுமன்றி விடுதலைப் புலிகளுக்கும் பொறுப்பு இருப்பதை மறந்து விடக்கூடாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மோசமான பாதுகாப்பு நிலையால் கிழக்கில் மீளமைப்பு பணிபாதிப்பு

## தமிழர் புனர்வாழ்வுக் கழகம்

கொழும்பு —

கிழக்கு மாகாணத்தில் மோசமான பாதுகாப்பு நிலைமைகளால் மீளமைப்புப் பணிகள் தாமதமடைந்து வருவதாக தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக புனர்வாழ்வுக் கழகத்தின் பேச்சாளர் அர்ஜுனன் எதிர்வீரசிங்கம் கூறியுள்ளதாவது -

கிழக்கில் வன்முறைகள் நீடிப்பதால் மீளமைப்புப் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன. வன்முறைகளால் சில பகுதிகளுக்கு பயணம் மேற்கொள்வது கடினமாகவுள்ளது.

சிமெந்து மற்றும் இரும்புத் தகடு போன்ற பொருட்களுக்கு பாதுகாப்புத் தரப்பினர் தடை விதித்துள்ளனர். விடுதலைப்புலிகளின் நிர்வாகப் பகுதிக்கு அந்தப் பொருட்களை எடுத்துச் செல்ல அரச அதிபர் அனுமதி பெற்றுத்தர வேண்டும்.

இருப்பினும் வடக்கு - கிழக்கில் மீளமைப்புப் பணிகளை இடை நிறுத்தும் முடிவு எம்மிடம் இல்லை எனத்தெரிவித்தார்.

# கடந்தகால குண்டு வெடிப்புகளை ஐ.தே.கட்சி மறந்து விட்டதாம்



## அனுர பிரியதர்சன யாப்பா கூறுகிறார்

கொழும்பு —

தற்போதைய குண்டுவெடிப்புச் சம்பவங்கள் குறித்துப் பேசும் ஐக்கிய தேசியக் கட்சி கடந்தகால சம்பவங்களை மறந்து விட்டுப் பேசுகிறது என்று ஊடகத்துறை அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக நாடாளுமன்ற விவாதத்தில் அவர் கூறியதாவது -

ஐக்கிய தேசியக்கட்சி தற்போது இடம் பெறும் குண்டு வெடிப்புச் சம்பவங்கள் குறித்து பேசுகிறது. 1988-1989 ஆம் ஆண்டுகளில் ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டு வீதிகளிலும், பொது இடங்களிலும் வீசப்பட்டதை மறந்து விடக்கூடாது. ஐக்கிய தேசியக் கட்சியினர் ஒரு நபரைக் கொல்வதற்கு 25 ஆயிரம் ரூபா வரை கூட பணம் கொடுத்துள்ளனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தலைமையிலான அரசாங்கம் அதிகாரத்துக்கு வரும் முன்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் ஒரு சத நிதி உதவியைக் கூட உலக வங்கி செய்யத் தயாராக இல்லை. மோசமான நிர்வாகத்தை நடத்தியதால் உலக வங்கி மறுத்துவிட்டது எனத் தெரிவித்தார்.

# சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களில் புலிக்கொடி பயன்படுத்துவதில் சர்ச்சை

கொழும்பு —

தமிழீழ விடுதலைப்புலிகளின் நிர்வாகப் பகுதியில்சேவையாற்றும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் அரசாங்கக் கொடி மற்றும் விடுதலைப் புலிகளின் கொடியை தங்களது பணியிடங்களில் பயன்படுத்துவது குறித்து சர்ச்சை ஏற்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக சுகாதார அமைச்சின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டது.

அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடானது பாரதூரமானது என்று ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினரும், அரச சார்பற்ற நிறுவனங்கள் தொடர்பான நாடாளுமன்ற தெரிவுக்குழுத் தலைவருமான விஜித ஹேரத் தெரிவித்தார்.

அரசாங்கக் கொடியையும், விடுதலைப் புலிகளின் இலச்சினையையும் ஒன்றாகப் பயன்படுத்தக் கூடாது என்றும் அவர் கூறியுள்ளார்.

இதனிடையே அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான இந்தியச் சட்டத்தை ஆராயவும் அரச சார்பற்ற நிறுவனங்கள் தொடர்பான நாடாளுமன்றக் குழு முடிவு செய்துள்ளது.

# கைதானவர்கள் விடுதலை

கொழும்பு —

இரத்தினபுரியிலுள்ள பாடசாலை ஒன்றில் குண்டு வைக்கப்பட்டுள்ளதாக அச்சுறுத்தல் விடுத்ததாகத் தெரிவித்து கைது செய்யப்பட்ட இரண்டு சிங்கள சந்தேக நபர்களை நீதிமன்றில் ஆஜராக்கிய பொலிஸார் அவர்கள் இருவரையும் தவறாக கைது செய்ததாகத் தெரிவிக்கப்பட்டதையடுத்து இருவரையும் நீதிவான் விடுதலை செய்தார்.

இரத்தினபுரி மிகிந்து வித்தியாலயத்துக்குக் கடந்த வாரம் வெடி குண்டு மிரட்டல் வந்தது.

இதையடுத்து முதலிகே சுனில் பெரேரா மற்றும் காமினி முன்னவீர ஆகியோரை பொலிஸார் கைது செய்து குருவிட்ட சிறைச்சாலையில் அடைத்தனர்.

இந்த நிலையில் இருவரையும் நீதிமன்றில் ஆஜர்படுத்திய பொலிஸார் இருவரையும் தவறாகக் கைது செய்துவிட்டோம் என்று ஒப்புக் கொண்டனர். இதையடுத்து இருவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

சிறைச்சாலையிலிருந்து விடுவிக்கப்பட்ட இருவரும் தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

இருவரையும் விடுதலைப் புலிகள், பயங்கரவாதிகள், விடுதலைப் புலிகளின் கூட்டாளிகள் என்றும் பொலிஸார் குற்றம் சாட்டியதாக அவர்களது உறவினர்கள் தெரிவித்தனர்.

# அதிகரிக்கும் வன்முறைகள் தேசிய கிறிஸ்தவ சபை கவலை

கொழும்பு —

இலங்கையில் அதிகரிக்கும் வன்முறைகள் குறித்து தேசிய கிறிஸ்தவ சபை கவலை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக தேசிய கிறிஸ்தவ சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

இராணுவத்தின் 3 ஆம் நிலை தளபதி லெப்.ஜெனரல் பரமி குலதுங்க உள்ளிட்ட சிலர் கொல்லப்பட்டமை, கெப்பிற்றிக்கொல்லாவ பஸ் குண்டு வெடிப்பில் 64 பேர் கொல்லப்பட்டமை எனப் பாரிய வன்முறைகள் கடந்த மாதத்தில் நடந்துள்ளன. இந்தச் சம்பவங்களில் பாதிக்கப்பட்டோரின் உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்தத் தாக்குதல்களில் விடுதலைப்புலிகளுக்குத் தொடர்பிருப்பதாக சாட்சியங்கள் சுட்டுகின்றன.

வன்முறையை கைவிட்டுவிட்டு அமைதியை உருவாக்க விடுதலைப் புலிகளும், அரசாங்கமும் ஜனநாயக முறையிலான நடைமுறைகளுக்குத் திரும்ப வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வாகனங்களை சோதனையிட மதவாச்சியில் காவலரண்

கொழும்பு —

வடபகுதியிலிருந்து தென்பகுதிக்குச் செல்லும் அனைத்து வாகனங்கள் மற்றும் பயணிகளை சோதனையிடுவதற்கான பிரதான காவலரண் மதவாச்சியில் அமைக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனைக்கமைய மதவாச்சி - கெப்பிற்றிக்கொல்லாவ சந்தியில் அமைக்கப்பட்டுள்ள இந்தச் சோதனைச் சாவடியில் - யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், பதவியா, கெப்பிற்றிக்கொல்லாவ மற்றும் புல்மோட்டைப் பகுதிகளிலிருந்து வரும் அனைத்து மக்களையும், பயணிகளையும் சோதனைக்குட்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வடமத்திய மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் கிங்ஸ்லி ஏக்கநாயக்க மற்றும் அனுராதபுரம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோரது கண்காணிப்பின் கீழ் கடந்த திங்கட்கிழமை தொடக்கம் இந்தச் சோதனைச் சாவடி இயங்கி வருவதாக மதவாச்சி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

இந்தச் சோதனைச் சாவடியூடாக பயணிக்கும் வாகனங்கள் மற்றும் பயணிகளிடம் வெடிமருந்துகள் உண்டா என்பதை மோப்ப நாய்கள் மூலம் கண்டு பிடிப்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (தே)

# பொன்சேகா மீதான தாக்குதல் மூன்று சந்தேக நபர்கள் கைது!



கொழும்பு —

இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சரத் பொன் சேகா மீதான தற்கொலைத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என சந்தேகத்தின் பேரில் 3 நபர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் பொலிஸ் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் -

இராணுவத் தளபதி மீதான த்தாக்குதல் தொடர்பான விசாரணைகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. கைது செய்யப்பட்ட கணவன், மனைவி உட்பட 3 நபர்களும் தாக்குதல் தொடர்பான திட்டங்களை மேற்கொண்டு வந்ததோடு தற்கொலைகுண்டுதாரியை ரம்புக்கணையில் தங்கவைத்திருந்ததுடன் பின்னர் வெல்வெரிய பிரதேசத்தில் தங்க வைத்துமுள்ளனர். இந்த இரு பிரதேசங்களுக்குமிடையில் போக்குவரத்தில் ஈடுபடுவதற்கு ஓட்டோ ஒன்றை விடுதலைப்புலிகள் வழங்கியிருந்தனர்.

தற்கொலை குண்டுதாரி மஞ்சுளாதேவி கணபதிப்பிள்ளை என இனம் காணப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை பரமி குலதுங்கவின் கொலை தொடர்பான விசாரணைகளையும் மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.


மனோகரா
யாழ்ப்பாணம்
மூன்றாவது வெற்றி வாரம்
ஜீவன், சோனியா அகர்வால், விவேக், அப்பாஸ், மாளவிகா
மற்றும் பலர் நடித்த
திருட்டு பயலே
(புதிய வெளியீடு)
காட்சி நேரம் 10.30,2.30,6.30.

ராஜா யாழ்ப்பாணம்
புதிய வெளியீடு
கரண் சாதனா பலர் நடித்

கொக்கி
காட்சி நேரம் : 10.30, 2.30 மட்டும்
08 ஆம் திகதி முதல் வடிவேல் நடித்த
23 ஆம் புலிகேசி
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு

நமது ஈழநாடு

சிந்தனைக்கு!
இன்னாசெய்தாரை ஒறுத்தல் அவர் நாண
நன்னயம் செய்து விடல்.
- திருக்குறள்

## நமது நோக்கு

# மறுக்கப்படும் மனித உரிமைகள்!

கைதுசெய்யப்படுவோர் தொடர்பாக மனித உரிமைகளைப் பேணும் வகையில் நடந்துகொள்ள வேண்டும் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ - கடும் உத்தரவு பிறப்பித்திருப்பதாக அரச தரப்பில் செய்திகள் வெளியிடப்பட்டிருந்தன.

மனித உரிமைகள் பேணும் விடயத்தில் படையினரும், பொலிஸாரும் தொடர்ச்சியான குற்றச்சாட்டுக்குள்ளாகியிருக்கும் நிலையில்தான் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது.

அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் இப்போது தனது கைகள் சுத்தமானவை என்பதைக் காட்டிக் கொள்வதற்கு ஆகக் கூடிய பிரயத்தனத்தை எடுக்க வேண்டியிருக்கிறது.

இந்திய வெளியுறவுச் செயலர் தனது விஜயத்தின் போதும் - விடைபெற்றுச் செல்லும் அமெரிக்கத் தூதுவர் தனது பிரியாவிடைச் செய்தியிலும் - அரசு தமது படைகள் ஒழுக்கக் கட்டுப்பாட்டுடன் நடப்பதை உறுதிப்படுத்த வேண்டும் என்று தான் கூறியுள்ளனர்.

அதாவது, தமிழ் மக்கள் மீதான படுகொலை, வன்முறைகள், தாக்குதல்கள் தொடர்பாக அரச படையினர் குற்றச்சாட்டுக்களுக்குள்ளாவது குறித்து சர்வதேச ரீதியில் கடும் அதிருப்தி நிலவுகிறது.

எனவேதான் அரசு மனித உரிமைகள் விடயத்தில் அக்கறையுடன் நடந்துகொள்வதாக காட்டிக் கொள்ள வேண்டிய நிலைக்கு உள்ளாகியிருக்கிறது.

இதனடிப்படையில்தான் ஜனாதிபதி மகிந்த - படையினருக்கும், பொலிஸாருக்கும் கடும் உத்தரவு பிறப்பித்ததான செய்தி வெளியிடப்பட்டது.

ஆனால், நடைமுறையில் படையினர் மனித உரிமைகளைப் பேணுகிறார்களா? குறிப்பாக குடாநாட்டை எடுத்துக் கொண்டால் - இங்கு நிலவுகின்ற இராணுவக் கெடுபிடிகள் மனித உரிமைகள் பேணப்படவில்லை என்பதையே எடுத்துக் காட்டுகின்றன.

அண்மையில் கொக்குவில் சந்தியில் காவலரண் மீது கைக்குண்டு வீசப்பட்டபோது- இ.போ.ச. பஸ் ஒன்றை மறித்து அதன் சாரதியை படையினர் தாக்கியிருந்தனர்.

இதையடுத்து இ.போ.ச. ஊழியர்கள் போராட்டம் நடத்த- குறிப்பிட்ட படையினர் மீது நடவடிக்கை எடுப்பதாக உறுதியளிக்கப்பட்டது. நேற்று முன்தினம் சம்பந்தப்பட்ட 8 படையினரைக் கைதுசெய்து விசாரணை நடத்துவதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு யாழ். படைத் தளபதி அறிவித்திருந்தார்.

ஆனால், அதேவேளை - பஸ் பயணிகளோ, பஸ் சாரதியோ தாக்கப்பட்டதாக வெளியானசெய்தி அப்பட்டமான பொய் என்று இராணுவத் தலைமையகத்தின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டிருக்கிறது.

ஒரு புறத்தில் படையினர் மீது நடவடிக்கை எடுக்கப்படுவதாகக் காட்டிக் கொண்டு மறுபுறத்தே அப்படியேதும் நடக்கவில்லையே என்று கூறி தம்மை நியாயப்படுத்திக் கொள்வதுதான் மனித உரிமைகளைப் பேணுவதற்கான நடைமுறையா?

யாழ்ப்பாணத்திலும், கொழும்பிலும் வெவ்வேறு விதமாக அறிக்கைகளை படைத் தளபதிகளே வெளியிடுகின்றபோது - சாதாரண படையினர் எந்தளவுக்கு மனித உரிமைகள் விடயத்தில் ஒழுக்கத்துடன் நடந்து கொள்வர் என்பது சந்தேகமே.

மனித உரிமைகள் பேணும் விடயத்தில் படையினர், பொலிஸார் மீதான குற்றச்சாட்டுக்களை இல்லாமல் செய்வது - நிச்சயம் அரச மற்றும் படை உயர் மட்டங்களின் கைகளிலேயே உள்ளது.

ஆனால், குறிப்பிட்ட தரப்புக்களே இந்த விடயத்தில் இரட்டைவேடம் போட முனையும்போது - நிச்சயம் மனித உரிமைகளை மதிக்கும் நிலை உருவாக்கப்படாது.

அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் படையினர் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவும் தயாரில்லை. அதேநேரம்- சர்வதேச குற்றச்சாட்டுக்களையும் தவிர்க்க வேண்டும் என்று பார்க்கிறது.


ஆறு காசுக்கு குதிரையும் வேண்டும். ஆறு கடக்கப் பாயவும்வேண்டும் எனில் அது என்ன சாத்தியமாகுமா?

267, Navalar Road,
Jaffna.
T.P.021-2225107
Fax - 021 - 2223922
Web - www.eezhanaadu.com
email-eezhanaadu @ yahoo.com

## நாடும் நடப்பும்



# விடுதலைப் புலிகளுடனான பேச்சை அரசு எவ்வகையில் நடத்தவுள்ளது?



## பகிரங்கப்படுத்தக் கோருகிறார் ரணில்

கொழும்பு—

இந்தியா மற்றும் இணைத்தலைமை நாடுகளுடன் இணைந்து சர்வதேசத்தின் உதவியுடன் சமாதானப் பேச்சுவாத்தைகளை முன்னெடுப்பதா? அல்லது புலிகளுடன் இரகசியத் தகவல்களை பரிமாறிக் கொண்டு தனித்து பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்படுமா என்ற அரசாங்கத்தின் நிலைப்பாட்டை நாடாளுமன்றத்திலும், மக்கள் மத்தியிலும் பகிரங்கமாக அரசு வெளியிட வேண்டுமென எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க கோரியுள்ளார்.

ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற குழுக் கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்ற குழு அறையில் இடம்பெற்றபோதே அவர் இவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளதுடன், நாடாளுமன்ற குழுவும் இந்தக் கருத்தை ஏற்றுக் கொண்டுள்ளது.

அரசாங்கம் இரட்டைவேடம் போடாது, உண்மையான நிலைப்பாட்டை வெளியிட்ட பின்னரே அதனை ஆராய்ந்து ஐ.தே.கட்சியின் ஆதரவை வழங்குவதா, இல்லையா என்பதை வெளியிட முடியும். அரசாங்கத்தின் சில நடவடிக்கைகளை அங்கீகரிக்காவிட்டாலும் ஜே.வி.பி போன்றல்லாது, அரசின் நடவடிக்கைகளை எமது கட்சி சீர்குலைக்காது. அண்மையில் கோட்டை ரஜமகா விகாரையில் வைத்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்தேன். அப்போது என்னுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென்றார். அதை நான் ஏற்றுக்கொண்டேன். அதன் போது ஐ.தே.கட்சியின் நிலைப்பாட்டை எடுத்துக் கூறுவேன்.

நோர்வே நாட்டின் ஐந்து கேள்விகளுக்கு அரசாங்கம் வழங்கிய பதில், தற்போது புலிகளுடன் நடத்தப்படும் அரசாங்கத்தின் இரகசிய பேச்சுவார்த்தைகள், கடிதப் பரிமாற்றங்கள் தொடர்பாக பதிலளிக்க வேண்டும். பேச்சுவார்த்தைகள் பகிரங்கப்பட வேண்டும் என்றும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நாட்டில் எது நடந்தாலும் ஐ.தே.கட்சியின் மீது குறை கூறுவது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் விசனம் தெரிவித்தனர்.

நாட்டினதும், மக்களினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்தாது, ஜனாதிபதியின் குடும்பத்தினரதும், அதிகாரிகளினதும் பாதுகாப்பையே அதிகரித்துக் கொண்டுள்ள அரசாங்கம் இராணுவ உயரதிகாரிகளின் பாதுகாப்பையும் கருத்திலெடுப்பதில்லை.

எனவே, இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அவசரகால சட்ட விவாதத்தின் போது வாக்களிப்பதில்லை என்ற தீர்மானம் எடுக்கப்பட்டது. அரசியல் சபையை நியமிக்காது 18 ஆவது அரசியலமைப்பு திருத்த சட்ட மூலத்தை ஏற்க முடியாதென்றும் இந்தக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

# தமிழக கடலோரப் பகுதிகளில் புலிகளின் ஊடுருவல் இல்லை

## கிழக்கு கடலோர காவல் படைத் தலைவர் தெரிவிப்பு

சென்னை—

தமிழகக் கடலோரப் பகுதிகளில் விடுதலைப் புலிகளின் ஊடுருவல் குறிப்பிடும் படியாக இல்லையென கிழக்கு கடலோர காவல் படைத் தலைவர் ராஜேந்திர சிங் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது -

இலங்கையில் பதற்றம் ஏற்பட்டுள்ளதை அடுத்து தமிழகக் கடலோரப் பகுதிகளில் தீவிர கண்காணிப்பு மேற்கொள்ளப் பட்டுள்ளது.

இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே பதற்றமான சூழ்நிலை நிலவுகிறது.

இதனால், வன்முறைச் சம்பவங்களுக்குப் பயந்து இலங்கைத் தமிழர்கள் 4 ஆயிரத்து 850 பேர் இதுவரை தமிழகத்துக்குஅகதிகளாக வந்துள்ளனர்.

இவ்வாறு அதிக அளவில் அகதிகள் வரும்போது அவர்களுடன் சேர்ந்து விடுதலைப் புலிகளும் வரக்கூடும் என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

இதையடுத்து கடற்படையுடன் இணைந்து கடலோரக் காவல் படையினர் தீவிர கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இதன்படி, இலங்கை எல்லைப் பகுதிக்கு அருகில் உள்ள மன்னார் வளைகுடா முதல் பாக்கு நீரிணை வரையிலான தமிழகக் கடலோரப் பகுதிகளில் கண்காணிப்புப் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

கடலோரக் காவல் படையின் 3 அதிநவீன கப்பல்கள் 24 மணி நேரமும் ரோந்துப் பணியில் ஈடுபட்டுள்ளன. இதேபோல கடற்படையின் கப்பல்களும் தீவிர ரோந்துப்பணியில் ஈடுபட்டுள்ளன.

இதுவரை விடுதலைப் புலிகள் எனக் குறிப்பிடும்படியான எவரும் தமிழகக் கடலோரப் பகுதியில் நுழையவில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

# முருகன் - நளினி தம்பதிகளின் உண்ணாவிரதம் தொடர்கிறது!

வேலூர்—

ராஜிவ் கொலை வழக்கில் தண்டனை பெற்று வேலூர் சிறையில் தண்டனை அனுபவித்துவரும் முருகன் நளினி தம்பதிகள் தங்கள் மகள் அரித்திரா தமிழகத்தில் தங்கிப் படிக்க விஸா வழங்கக் கோரி கடந்த 25 ஆம் திகதி முதல் உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர்.

நேற்றுமுன்தினம் பத்தாவது நாளாக உண்ணாவிரதத்தை இருவரும் தொடர்ந்தனர். சிறைத்துறை அதிகாரிகள், தம்பதிகளைச் சந்தித்து உண்ணாவிரதத்தைக் கைவிட அவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தியும் இருவரும் கேட்கவில்லை. இதனால் இருவரது உடல்நிலையும் பாதிக்கப் பட்டுள்ளது.

வேலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையைச் சேர்ந்த டொக்டர்கள் குழு நேற்று முன்தினம் சிறைக்குச் சென்று முருகன் - நளினி தம்பதிகளின் உடல்நிலையைப் பரிசோதித்தனர். சிறையிலேயே மருத்துவக் குழுவினர் தங்கி இருந்து தம்பதிகளின் உடல் நிலையைத் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

# பேச்சுக்கள் மீண்டும் சாத்தியமா?

சமாதானத்தைப் பேசுவது மாத்திரம் போதுமானதல்ல. அதன்மீது நம்பிக்கை வைக்க வேண்டும். அதன் மீது நம்பிக்கை வைப்பது மட்டும் போதாது அதற்காகச் செயற்படவேண்டும்.

இரண்டாவது உலக மகா யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரும் வகையில் 1951 ஆம் ஆண்டு நவம்பர் 11 ஆம் திகதி அமெரிக்க ஜனாதிபதியின் மனைவி எலினோ ரூஸ்வெல்ட்டினால் அமெரிக்காவின்குரல் (Voice of America) வானொலிக்கு வழங்கிய அறிக்கை இது.

வடக்கு - கிழக்கு சிக்கலின் தன்மையும் காலத்தோடு இணைந்து நிலவுகிறது. அத்துடன் பல்வேறு துறையைச் சேர்ந்தவர்களும் சமாதானம் குறித்து அதிகம் பிதற்றியுள்ளனர். சமாதானத்தைப் பெற்றுக் கொள்வதற்கு பேச்சுவார்த்தைக்கு இறங்குவதனால், பேச்சு வார்த்தையின் மூலம் தீர்வைப் பெற வேண்டுமென சிலர் நம்புகின்றனர். தீர்வைப் பெறுவது எவ்வாறாக இருப்பினும் அதனுடன் தொடர்புடைய பேச்சுவார்த்தையை முன்னெடுத்துச் செல்வது



கடினமாக உள்ளது. இதற்கு அடிப்படைக் காரணம் பரஸ்பரம் இரு தரப்பினரிடையேயும் உள்ள சந்தேகமே. அதனால் ஒழிக்கப்பட்ட கொள்கைப் பத்திரங்களுக்கமைய இரு தரப்பும் செயற்படுகின்றன. ஒருவரையொருவர் ஏமாற்றும் நோக்கத்தை முதலாகக் கொண்டு செயற்படுவதால் சமாதானப் பாதையில் இறங்குவது மிகவும் கடினமாக உள்ளது.

அதேபோன்று அதற்கு சமமான ஒற்றையாட்சி மற்றும் வோறொரு ராஜ்ஜியம் என்ற கருத்துகளில் தொங்கிக் கொண்டிருப்பதனால் தீர்வு சம்பந்தமான பேச்சுவார்த்தை மூலம் பெற்றுக்கொள்ளவேண்டிய பெறுபேறு அன்னியமின்மைக்கு உட்பட்டிருக்கிறது. எனவே, எவராவது ஒருவருக்கு இந்தப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவது பிரயோசன மற்ற முயற்சியாகவும் தெரியலாம்.

எவ்வாறாயினும் யுத்தத்தில் இறங்காமல் போர் நிறுத்த ஒப்பந்தத்தைப் பாதுகாத்துக் கொண்டு இந்தச் சிக்கலுக்குத் தீர்வு காணப் போவதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது. அது போன்று விடுதலைப்புலிகளும் போர்நிறுத்த ஒப்பந்தத்திலிருந்து விலகவில்லையெனவும், பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைக்குத் தீர்வைப் பெறத் தயாரெனவும் தெரிவித்துள்ளனர்.

இருதரப்பினரிடையேயும் கருத்துகள் ஒன்றிணையும் போது ஒற்றையாட்சிக்குள் பங்கிடும் நாடு அல்லது பங்கிடும் நாட்டை ஒற்றையாட்சிக்குள் என்ற தர்மசங்கடமான நிலை தோற்றுவிக்கிறது. அது எப்பொழுதுமே நிகழக்கூடியதொன்றல்ல. அப்படியிருப்பினும் ஒற்றையாட்சி மற்றும் தனி ராஜ்ஜிய முறையில் தனியே மக்களை அடிப்படையாகக் கொண்ட மற்றும் தேசத்தின் நிலப்பகுதி என்பனவற்றை அதன் பொருட்டு இணைத்துக் கொள்ளாது செயற்படுவதன் மூலம் இரு தரப்பும் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு இயலுமெனக் கருதிக் கொள்ளலாம்.

நிலைமை இவ்வாறு இருக்கும் போது பேச்சுவார்த்தை மேசையில் ஒருவருக்கொருவர் குற்றம் சாட்டுவதைத் தவிர வேறு எதுவும் நிகழப் போவதில்லை. பேசப்படவேண்டியது என்ன? பேச்சுவார்த்தை நடத்தப்படவேண்டியது எப்படி? என்பன குறித்து உறுதியான தீர்மானத்துக்கு வராது இவ்வாறு நிகழும்




பேச்சுவார்த்தைகள் மூலம் பிரதிபலன்கள் ஏற்படப்போவதில்லை. அதன்மூலம் இரு தரப்பும் அரசியல் முதிர்ச்சி அடையாத தன்மைக்கு உள்ளடக்கப்படுவார்கள்.

எவ்வாறாயினும், விடுதலைப் புலிகள் மீண்டும் பகிரங்க யுத்தத்துக்குச் செல்லாமல் பேச்சுவார்த்தைக்கு வருவது நல்லதொரு தன்மையாகும். 2001 ஆம் ஆண்டு தொடக்கம் விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைக்கு வந்தது அவர்களது பலம் வீழ்ச்சியடைந்தமையாலென குறைத்து மதிப்பிடுவது சரியானதல்ல. உதாரணமாக 2001 ஆம் ஆண்டு ஐ.தே.கட்சி அரசுடன், விடுதலைப் புலிகள் பேச்சுக்கு வந்தது - அமெரிக்கா சர்வதேச பயங்கரவாதத்துக்கெதிராக எடுத்த நடவடிக்கைகளும், விடுதலைப் புலிகளின் தலைவரின் யுத்த ரீதியான நோக்கம் மாற்றமடைந்து ஜனநாயக முறையை பின்பற்றியது, அப்போதிருந்த பிரதமரது அரசியல் அனுபவம், படைகளின் மூலம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இரகசிய நடவடிக்கைகள் என்பனவற்றின் பின்னணியிலாகும்.

இவ்வாறு காரணங்களைக் காண்பித்தவர்களுக்கு அதற்குத் தேவையான உறுதியான பின்புலம் இருக்கவில்லை. பிரபாகரன் தனது உருமறைப்பு ஆடையை நீக்கிவிட்டு சாதாரண ஆடையில் மாறி ஊடகவியலாளர் முன்தோன்றியது யுத்தசெயற்பாட்டு வழிகளிலிருந்து விலகி ஜனநாயக வழியைக் கடைப்பிடிப்பதாக வரைவிலக்கணம் கூறினார்கள்.

விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைகளிலிருந்து விலகி மீண்டும் வன்முறைகளில் இறங்கியபோது அதற்குக் காரணமாக புலிகளை யுத்தவாதிகள் என முத்திரை குத்தினார்கள். அது அப்போதைய பிரதமரால் திட்டமிடப்பட்ட சர்வதேச பாதுகாப்பு வலையினின்றும் மீள்வதற்கு எடுத்த முயற்சியாகவும் கருதலாம்.

ஐ.தே.கட்சி முன்னெடுத்துச் சென்ற பேச்சுவார்த்தையால் விடுதலைப் புலிகளுக்கு அனுகூலங்கள் இல்லையெனவும், இதன் போது கூறப்பட்டது.

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி ஆனதும் விடுதலைப் புலிகள் மீண்டும் பேச்சுவார்த்தைக்கு வந்தனர். அப்போது கருணா குழுவின் தாக்குதலினாலேயே விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைக்கு வந்ததாகக் கூறப்பட்டது. அதற்கும் மேலதிகமாக தற்போதைய ஜனாதிபதியினதும், அரசாங்கத்தினதும் அரசியல் முதிர்ச்சியடைந்த தன்மையையும் விளங்கிக் கொண்ட விடுதலைப் புலிகள் பேச்சுக்கு வந்ததாகவும் சொல்லப்பட்டது.

இந்த வேளையில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கரமசிங்கவின் பாதுகாப்பு வலையமைப்பிலிருந்து கழருவதற்கு அவரைத் தோற்கடித்து மகிந்தவுடன், விடுதலைப் புலிகள் இணைந்துள்ளதாகவும் கூறப்பட்டது.

மீண்டும் புலிகள் கிளைமோர் குண்டுகளை வெடிக்க வைப்பதற்கு ஆரம்பித்தார்கள். தனிராஜ்ஜியத்தை வழங்காத அரசாங்கத்தின் விருப்பத்தின் காரணமாக புலிகள் ஆயுதம் ஏந்தியதாகக் கூறப்பட்டது. முதற்சுற்றுப் பேச்சின்போது அரச பிரதிநிதிகள் குழு, விடுதலைப் புலிகளை தமது ஆணைச் சக்கரத்துக்கு உட்படுத்துவதில் வெற்றி பெற்றதால் அவர்கள் இரண்டாவது பேச்சுக்குச் செல்ல அஞ்சினார்களெனவும் கூறப்பட்டது. மீண்டும் பயங்கரங்களுக்கு மத்தியில் ஒஸ்லோ பேச்சுக்கு விடுதலைப் புலிகள் சென்றபோது ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப் புலிகள் மீது தடை விதித்தமையால் அதிலிருந்து தப்புவதற்கே அவர்கள் சென்றதாகக் கூறப்பட்டது.

ஆனால், பேச்சுவார்த்தையில் பங்கேற்காமல் விடுதலைப் புலிகள் மீண்டும் வந்தபோது - மீண்டும் புலிகள் யுத்தவாதிகளெனவும், பேச்சுவார்த்தை மூலம் தீர்வைப் பெறமுடியாதெனவும் தெரிவித்தனர்.

இவை அனைத்தையும் நடுநிலையுடன் ஆராய்ந்து பார்க்கும் போது அவை அடிப்படை இல்லாத பிதற்றல்கள் என்பதையும், அர்த்தமில்லாத கூற்றுகள் என்பதையும் விளங்கிக் கொள்ளலாம்.

இவ்வாறு அடிப்படை இல்லாத அறிக்கைகளை வெளியிடுவதன் மூலம் விடுதலைப் புலிகளின் உபாயங்களை திரட்டிக்கொள்ள இயலாமற் போகும். விடுதலைப் புலிகள் தற்போது அரசியல் தீர்வைப் பெறும் கட்டத்துக்கே இறங்கியுள்ளனர்.

விடுதலைப்புலிகளின் பிரிவினைவாதக்



கிளர்ச்சி இரண்டு கட்டங்களைக் கொண்டது. முதலாவது கட்டம் - யுத்த ரீதியான அமைப்பு என்பதுடன் அதில் 4 நடவடிக்கைகள் அடங்கியுள்ளன. இதில் முதலாவது - 1975 - 1980 வரை ஆயத்த நடவடிக்கை. 1980 - 87 வரை எதிர்த்து நிற்கும் நடவடிக்கை. 1987 - 90 வரை இந்திய அமைதிப்படை வந்ததால் யுத்த ரீதியான அமைப்பு பின்வாங்கிச் செல்ல நேர்ந்தது. 1990 - 97வரையான செயற்பாட்டை எதிர்த்து நிற்கும் நடவடிக்கை. 1997 - 2001 வரை பகிரங்க யுத்தம் (Open offenssive) என்பனவாகும்.

பகிரங்க யுத்த நடவடிக்கையின் போது விடுதலைப் புலிகள் பகல், இரவென இரண்டு வேளைகளிலும் தாக்குதல் தொடுக்கும் ஆற்றலைப் பெற்றதுடன், முல்லைத்தீவு, மாங்குளம், ஆனையிறவு, கிளிநொச்சி ஆகிய பாதுகாக்கப்பட்ட பிரதேசங்கள் அனைத்தையும் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

1980 - 2001 வரை இருந்த அரசாங்கங்களுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின் போது அவர்களிடம் உத்தியோக பூர்வமாகக் காண்பிப்பதற்கு அரசியல் பிரிவு இருக்கவில்லை. அதற்காக அவர்கள் விடுதலைப் புலிகளின் பேச்சுவார்த்தைக்குழு என்ற பதத்தைப் பயன்படுத்தினார்கள். இந்த நடவடிக்கைகளுக்காக யோகரட்ணம் யோகி, அன்ரன்பாலசிங்கம் ஆகியோர் பங்கேற்றனர்.

திம்பு பேச்சு, பிரேமதாஸவுடனான பேச்சு, சந்திரிகாவுடனான பேச்சுகளில் விடுதலைப் புலிகளின் மேற்படி பேச்சுக்குழுவே பங்கு பற்றியது. அவை அனைத்தும் யுத்த திட்டங்களின் பல்வேறு நடவடிக்கைகளாகும். 2001 ஆம் ஆண்டளவில் விடுதலைப் புலிகள் பகிரங்கப்படுத்திய யுத்த நடவடிக்கை வரை வளர்ச்சியடைந்துள்ளமையால், இதன்பின்பு நடைபெற்ற அனைத்துப் பேச்சுவார்த்தைகளுக்கும், அரசியல் பிரிவு தேவைப்பட்டது. அப்பொழுது தமிழ்ச் செல்வன் தலைமையிலான அரசியற் பிரிவு தோன்றியது. அதன்படி அவர்கள் பேச்சில் பங்கு பற்றினார்கள். இதிலிருந்து அவர்கள் அரசியல் யுத்த கட்டத்தில் இறங்கியுள்ளமை தெளிவாகின்றது.

அதன் படி விடுதலைப்புலிகள் தங்கள் அரசியல் நிலைப்பாட்டை கட்டியெழுப்பும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். பெற்றுக் கொண்ட யுத்த ரீதியான வெற்றியை அரசியல் வெற்றியாக மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். தங்கள் பாதுகாப்புக்காக செயற்பாடுகளை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். 'அரசியல் அதிகாரம் வருவது துப்பாக்கி பரலுக்குள்' என்று மா.ஓ.சேதுங் ஒருதடவை தெரிவித்திருந்தார். இதுவரை விடுதலைப்புலிகள் பெற்றுக் கொண்ட யுத்த பலத்தை வெற்றியாக மாற்றிக் கொள்ளும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதனால் வெளிப்படையான யுத்தத்துக்கு செல்வதற்கு ஏதோ ஒரு விதத்தில் தயக்கம் நிலவுகிறது. விடுதலைப்புலிகள் மீண்டும் பகிரங்க யுத்தத்துக்கு செல்ல வேண்டுமெனில் யுத்த இலக்கு இருக்க வேண்டும். தற்போது வடக்கு - கிழக்கில் இராணுவம் தங்கியுள்ள பிரதே சங்கள் அவர்களது இலக்காகும். இதற்காக வெளிப்படையான யுத்தத்துக்கு செல்வதை விட அரசியல் பேச்சுவார்த்தை அர்த்தமுள்ளதாகும், பயனுள்ளதாகும்.

2001 ஆம் ஆண்டுக்கு முன்னர் நிலவிய பேச்சுவார்த்தையில் நடுநிலையாளர்கள் இல்லை. இதன்பின் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் நடுநிலையாளர்கள் இருந்தனர். இவ்வாறு நடுநிலையாளர்கள் பங்கு பற்றுவதைக் குறிப்பிட்ட சில அரசியற் கட்சிகள் பொறுக்க முடியாத தன்மையைக் காண்பித்தன. அந்த நடுநிலையாளர்கள் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான தோற்றத்தைக் காண்பித்தமை இந்தப் பொறுக்க முடியாத தன்மைக்கு காரணமாகவுள்ளது.

விடுதலைப் புலிகள் முன்பிருந்த நிலையை விட இன்று வளர்ச்சியடைந்துள்ளனர். பிரச்சினை மிகவும் முற்றிய நிலைக்கு சென்றுள்ளது. எனவே நடுநிலையாளர்களின் பங்களிப்பு மிகவும் முக்கியமானது.

(ஞாயிற்றுக்கிழமை தொடரும்...)

தமிழில் - நாடோடி

# இயந்திரம் திருத்தும் பயிற்சி நிலையம் வடமராட்சியில் அமைக்க ஏற்பாடு

வடமராட்சி

வடமராட்சி வடக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் உள் மற்றும் வெளியிணைப்பு இயந்திரங்களை திருத்தும் பயிற்சி நிலையம் ஒன்றை அமைக்கவுள்ளது.

போரூட் நிறுவனத்தின் யாழ். கிழக்கு திட்டத்தின் நிதியுதவியுடன் இந்தப் பயிற்சி நிலையம் அமைப்பதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுவருகிறது.

இருகட்ட நிதியுதவியுடன் அமைக்கப்படவுள்ள இந்தக் கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டும் விழா எதிர்வரும் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு வடமராட்சி வடக்கு கடற்தொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர் டொன் பொஸ்கோ தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் போரூட் நிறுவனத்தின் பிரதிநிதிகள், கடற்தொழில் திணைக்கள அதிகாரிகள், மீனவர் சங்கப் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்தப் பயிற்சி நிலையம் அமைத்து முடிந்ததும் மீனவர்களுக்கான இயந்திரப் படகு திருத்தம் மற்றும் அதனைக் கையாளும் முறைகள் தொடர்பான பயிற்சிகள் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

# நாளை சிறுவர் இல்லங்களின் பொறுப்பாளர்களுடன் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்

சிறுவர் இல்ல பொறுப்பாளர்களுடனான கலந்துரையாடல் நாளை காலை 10மணிக்கு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ்.நீதி நிர்வாக எல்லைக்குட்பட்ட சகல சிறுவர் இல்லங்களினதும் பொறுப்பாளர்கள் அனைவரையும் கலந்துரையாடலுக்கு சமூகளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம்,நல்லூர்,கோப்பாய் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த நிர்வாக உத்தியோகத்தர்கள், நன்னடத்தை அதிகாரிகள், நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்கள் -

சிறுவர் உரிமை பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், உளவளத்துணை உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோரை இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு நீதிமன்ற பதிவாளர் க.சட்டநாதர் அறிவித்துள்ளார்.

# மனித உரிமைகள் ஆணைக்குழுவுடன் தொடர்புகொள்ளுமாறு கோரிக்கை!

யாழ்ப்பாணம்

கீழே குறிப்பிடப்பட்டுள்ளவர்களின் உறவினர்கள் தொடர்பாக மேலதிக விபரங்களைச் சேகரிப்பதற்கும், இவர்கள் தொடர்பாக மேலதிக நடவடிக்கை எடுப்பதற்காகவும் உடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் அறிவித்துள்ளனர்.

செ.ஆனந்தன் (மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி) - அரோகன் (மல்லிகா வண்ணை, சங்கானை) - செல்வி. அ.சிவாஜினி (உரும்பிராய் கிழக்கு) - அ. சத்தியசீலன் (பனிப்புலம், பண்டத்தரிப்பு) - க.ஜெயகோ (பிள்ளையார் குளம், காங்கேசன்துறை) -ஐ.ராகுலன் (240/A 2 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்) -

இராசையா (ஜயனார் கோவில் வீதி, கொடிகாமம்) - கமைதி வடிவேலு (240, 2 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்) வ.தயாளனி (நாவற்குழி, பனிச்சன்தோட்டம், சாவகச்சேரி)

# தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களின் இறுதிப் பரீட்சை ஒகஸ்ட் 14 இல் ஆரம்பம்

யாழ்ப்பாணம்

கடந்த வருடம் 2005 டிசெம்பர் மாதம் நடைபெறவேண்டிய பயிற்சி நெறிகளின் முடிவில் தலைமைத் திணைக்களத்தால் நடத்தப்படுகின்ற ஆண்டிறுதிப் பரீட்சைகள் யாவும் ஒகஸ்ட் 14 ஆம் திகதிமுதல் தொடங்கி 10 நாட்களுக்குள் நடத்தி முடிப்பதற்கு ஏற்பாடுகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதாக யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியின் அதிபர் ந.யோகராஜன் தெரிவித்தார்.

2005 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் நடைபெறவேண்டிய ஆண்டிறுதிப் பரீட்சைகள் அப்போது நிலவிய சூழ்நிலை காரணமாக மாணவர்களின் பரீட்சைக்கு தோற்றமுடியாத காரணத்தால் தடைப்பட்டது.

இது தொடர்பாக கடந்த வாரம் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்துக்கும் - பரீட்சை பணிப்பாளருக்கும் இடையிலான சந்திப்பின்போது அதிபரால், மாணவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்பு தொடர்பாக விளக்கியதையடுத்து இந்தப் பரீட்சையை உடன் நடத்துவதற்கான பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

எனவே, கடந்த வருடம் இறுதிப் பரீட்சைக்குத் தோற்றவேண்டிய மாணவர்கள் உடனடியாக பரீட்சைக்கு ஆயத்தமாகும்படி கல்லூரியின் அதிபர் அறிவித்துள்ளார்.

பரீட்சைக்கான நேர அட்டவணை அடுத்த இரு வாரங்களுக்குள் கல்லூரி விளம்பரப் பலகையில் பார்வைக்கு வைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

2005 ஆம் ஆண்டு பரீட்சைக்கு தோற்றுவதற்காக திணைக்களத்தால் வழங்கப்பட்ட பரீட்சை அனுமதி அட்டையையே இந்தப் பரீட்சைக்கும் பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதுவரை அனுமதி அட்டைகளைப் பெறாதவர்கள் எதிர்வரும் 21 ஆம் திகதி காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆலய உற்சவம்

யாழ்ப்பாணம்

புலோலி தெற்கு -வில்லுபாதி முருகன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று காலை 10மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து 10நாட்கள் நடைபெறும். உற்சவகாலங்களில் தினமும் சொற்பொழிவுகள் நடைபெறும்.

# மண் விநியோகப் பணியாளர்கள் படையினரால் தாக்கப்பட்டனர்!

## ஆனைவிழுந்தானில் சம்பவம்

வடமராட்சி கிழக்கு

வடமராட்சி கிழக்கில் புனர்வாழ்வு நிறுவனத்தின் மணல் விநியோகப் பகுதி பணியாளர்கள் உட்பட மூவர் நேற்றுமுன்தினம் படையினரால் தாக்கப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் காலை குடத்தனையில் உள்ள மணல் விநியோக அலுவலகத்துக்கு கன்ரர் வாகனத்தில் சென்றுகொண்டிருந்தவேளை பருத்தித்துறை - ஆனைவிழுந்தான் பகுதியில் வழிமறித்த படையினர் இவர்களை படுமோசமாகத் தாக்கியுள்ளனர்.


படையினரின் தாக்குதலால் அச்சமடைந்த இவர்கள் மூவரும் அலுவலகத்துக்குச் செல்லாது திரும்பிச் சென்றதால் நேற்றுமுன்தினம் மண் விநியோகப் பணிகள் இடைநிறுத்தப்பட்டன.

மண் விநியோகப் பணிகள் இடைநிறுத்தப்பட்டதால் நேற்றுமுன்தினம் மண் ஏற்றுவதற்காகச் சென்ற பெருமளவானோர் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

எனினும், நேற்று வழமை போன்று மண் விநியோகம் இடம்பெற்றதாக வடமராட்சி கிழக்கு புனரமைப்புக் குழுவினர் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை, இந்தச் சம்பவத்தின்போது இவர்களை ஏற்றிச்சென்ற கன்ரர் வாகனத்தின் சாரதியும் கடுமையாகத் தாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக யாழ்.அரச அதிபர் கே.கணேஷிடம் வடமராட்சி கிழக்கு புனரமைப்புக் குழுவினர் முறைப்பாடு செய்துள்ளனர்.





அண்மையில் தமிழ்நாட்டுக்கு விஜயம் செய்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் - ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வை.கோவை சென்னையில் உள்ள ம.தி.மு.க. தலைமைச் செயலகத்தில் சந்தித்தபோது, அவர் சிவாஜிலிங்கத்துக்கு பொன்னாடை போர்த்தி வரவேற்பதை முதலாவது படத்திலும் -

பாட்டாளி மக்கள் கட்சி நிறுவுனர் டொக்டர் ராமதாஸை சென்னையில் உள்ள பொங்குதமிழ் அறக்கட்டளை நிறுவனத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் சந்தித்தபோது மலர்கொத்தை வழங்கி வரவேற்பதை அடுத்த படத்திலும் காணலாம்.

## வேட்டைத் திருவிழா

கரவெட்டி

கரணவாய் - வெற்றியாட்டுப் பிள்ளையார் ஆலயத்தின் வேட்டைத் திருவிழா இன்று பிற்பகல் நடைபெறவுள்ளது.

நாளை தேர்த் திருவிழாவும், நாளைமறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளதாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

## நந்தாவில் அம்மன் மஹோற்சவம்

யாழ்ப்பாணம்

கொக்குவில் - நந்தாவில் கட்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது. எதிர்வரும் 10 ஆம் திகதிவரை தொடர்ந்து நடைபெறவுள்ளது.

நாளைமறுதினம் தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்த உற்சவமும் நடைபெறவுள்ளது.

## பதவியேற்பு நிகழ்வு

வடமராட்சி

வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் புதிய நிர்வாக உறுப்பினர் பதவியேற்பு நிகழ்வு நாளை மறுதினம் காலை 10.30 மணிக்கு பருத்தித்துறை - முதலாம் கட்டையில் உள்ள துரை இல்லத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் லயன் டொக்டர் வி.யோகேஸ்வரன், லயன் டொக்டர் யாழினி ஆகியோர் பிரதம விருந்தினராகவும், இலங்கை வங்கியின்ஓய்வு பெற்ற உதவிப் பொது முகாமையாளர் கே.பாலசுப்பிரமணியம் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர்.

# வல்லை பாலத்துக்கு அண்மையில் காவலரண் அமைக்கும் படையினர்

வடமராட்சி

வல்லை பாலத்துக்கு அண்மையில் இராணுவத்தினர் புதிய காவலரண் ஒன்றைஅமைத்து வருகின்றனர்.

தற்போது யாழ். குடாநாட்டில் ஏற்பட்டுவரும் போர்ச்சூழலை அடுத்து இராணுவத்தினர் அண்மைக்காலமாக பாதுகாப்பு நிலைகளைப் பலப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

வல்லைப் பகுதியில் ஏற்கனவே போர்நிறுத்த உடன்படிக்கையின் பின்னர் பல காவலரண்களை ஏற்கனவே அமைத்துள்ள இராணவத்தினர் - வல்லை பாலத்துக்கு அண்மையில் இதுவரை நான்கு காவலரண்கள் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சுந்தரியே நாகம்மா எழுந்தருளாய்



ஆயகலை அறுபத்து நான்களிக்கும்
அம்பிகையே! ஆரணியே என்று போற்றி
தாயவளின் திருவடியே தஞ்சமென்று
தடைதாண்டிக் கடல்கடந்து வந்தோமம்மா !
தாயகத்தில் தமிழர் படு அவலமெல்லாம்
தடுத்திடுவாய் ! அமைதியினைத் தருவாயென்று
தூயதமிழ்ப் பாமாலை பாடிநின்றோம்
சுந்தரியே ! நாகம்மா எழுந்தருள்வாய் !

கவிஞர் நயினை இராகுலன்

MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ராம்கோ சீமெந்து
RAMCO CEMENT

SLS - 107 அங்கீகாரம் பெற்றது
ISO - 9002 தரம் பெற்றது
BSS - 12 - 1991 தரத்திற்கு அமைவானது
(பிரித்தானிய தரத்திற்கு அமைவானது)

யாழ்.மக்களின் ஏகோபித்த பாவனையில் உள்ள 100 வீதம் OPC யை உள்ளடக்கிய, நூற்றாண்டுகள் பழமை வாய்ந்த போட்லான்ட் சீமெந்து, மொத்த விலை - 700/- ஆகவும் சில்லறை விலை 720/- ஆகவும் விற்பனை செய்யப்படுகின்றது. ஆகவே ராம்கோ சீமெந்தைப் பாவித்து ரூபா 80/- மிகுதிப்படுத்துங்கள்.

தொடர்புகளுக்கு :
ஈஸ்வரபகவான் அன் கம்பனி,
இல.91 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P : 021 - 222 2350
[C/5446]

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# மட்டக்களப்பில் விபத்து; 24 பக்தர்கள் படுகாயம்!

மட்டக்களப்பு—

மட்டக்களப்பில் பக்தர்கள் பயணித்த வாகனம் ஒன்று விபத்துக்குள்ளானதில் 24 பேர் படுகாயமடைந்தனர். விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான மட்டக்களப்பு - இலுப்பையடிச் சேனையில் உள்ள கோதியாபுரம் நாகதம்பிரான் ஆலய திருவிழாவுக்குச் சென்றுவிட்டு வாகனத்தில் வீடு திரும்பிக் கொண்டிருந்த பக்தர்களே விபத்தில் சிக்கினர்.

காஞ்சிரங்குடா வீதியில் நேற்றுக் காலை 6.30 மணியளவில் வேகமாகச் சென்று கொண்டிருந்த பஸ் கட்டுப்பாட்டை இழந்து வீதியோரத்தில் இருந்த மரத்தின் மீது மோதி விபத்துக்குள்ளானதில் 24 பேர் படுகாயமடைந்தனர்.

காயமடைந்தோர் மட்டக்களப்பு வைத்தியசாலையில் சிகிச்சைக்காகஅனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஏகாம்பரமூர்த்தி சசிகலா (வயது 27) என்பவர் சத்திர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார். மேகநாதன் கீர்த்தனா (வயது 12) எனும் சிறுமி கொழும்பு தேசிய வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

## மீனவர் சுட்டுக் கொலை!

திருகோணமலை—

திருகோணமலை - செல்வநகர் கடல்நீரேரியில் மீனவர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துக்கு இலக்காகி மரணமானார்.

அமீர் என்ற 46வயதுடைய மீனவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவர் நேற்றுப் பிற்பகல் 3மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இவர் ஊர்காவற்படையில் அங்கம் வகிப்பவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# வங்காலைப் படுகொலைகள்; இராணுவ அதிகாரியிடம் விசாரணை!

மன்னார்—

மன்னார் - வங்காலையில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பான விசாரணைகள் நேற்று மன்னார் மாவட்ட மேலதிக நீதிவான் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டது.

படுகொலை தொடர்பாக சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு பொறுப்பான இராணுவ அதிகாரி மேஜர் நந்ததிலக சில்வா சாட்சியமளிக்கையில் -

எனது கட்டுப்பாட்டின் கீழ் 26 படையினர் மட்டுமே இருக்கின்றனர். அதில் சம்பவம் நடைபெற்றவேளை நால்வர் மட்டுமே வெளிக்கடமையில் ஈடுபட்டனர். ஏனையோர் முகாமுக்குள் இருந்ததாக அவர் கூறினார்.

இதேவேளை, இராணுவ மேஜரிடம் மேலதிக நீதிவான் ரி.ஜே.பிரபாகரன் சில வினாக்களுக்கு பதிலளிக்குமாறு உத்தரவிட்டார்.

சம்பவம் நடைபெற்றதினம் வெளிக்கடமையில் இருந்த நால்வரினதும் பெயர் விபரங்கள், சம்பவதினம் விடுமுறையில் வீடு சென்றவர்கள், வைத்தியசாலைக்குச் சென்றவர்கள், சம்பவம் நடைபெறுவதற்கு முன்னர் மூன்று நாட்களுக்கு முன்னரும் சம்பவம் நடைபெற்ற மூன்று தினங்களுக்குப் பின்னர் விடுமுறையில் சென்றவர்கள். வைத்தியசாலைக்கு சென்றவர்களின் விபரங்களையும் ஒப்படைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இதேவேளை, கொலை செய்யப்பட்ட பெண்ணின் மூன்று உறவினர்களும் சாட்சியம் அளித்தனர்.

வழக்கு விசாரணை எதிர் வரும் 14 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

(மோ)

# தமிழ்ச்செல்வன் கருத்தை அரசாங்கம் நிராகரிப்பு!

கொழும்பு—

இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சியில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இரட்டைவேடம் போடுவதாக விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் சுமத்திய குற்றச் சாட்டை அரசாங்கம் நிராகரித்துள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இது குறித்து கருத்து வெளியிட்ட அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா - தமிழ்ச்செல்வன் புலிகள் அமைப்பை தமிழ் மக்களின் ஏக பிரதிநிதியாக காட்ட முயற்சிக்கிறார்.

ஆனால், பல தமிழ் அரசியல் கட்சிகள் அரசுடன் இணைந்து செயற்படுவதானது இவரின் கூற்றைப் பொய்ப்படுத்துகிறது.

நெருக்கடியான நிலைமை நிலவிய போதும், சமாதான தீர்வொன்றை எட்டுவதற்கு பேச்சுவார்த்தை மூலமே முடியும் என்ற நிலைப்பாட்டில் அரசு உறுதியாகவுள்ளது. நாட்டில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்கு சகலரும் ஏற்றுக் கொள்ளும் அரசியல் தீர்வின் மூலமே முடிவு காணலாம்.

இதற்காக நிபுணத்துவ ஆலோசனைக் குழுவொன்று நியமிக்கப்படட, இந்தக்குழு எதிர்வரும் 11ஆம் திகதி முதன் முறையாக ஜனாதிபதியின் தலைமையில் கூடவுள்ளது.

இந்தக்குழு உலகிலுள்ள அதிகாரப்பகிர்வு முறைகளில் இலங்கைக்கு ஏற்ற தேசியத் தன்மை கொண்ட ஒரு அதிகாரப் பகிர்வை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## படையினர் மீது துப்பாக்கிச் சூடு !

யாழ்ப்பாணம்—

யாழ் - கல்வியங்காட்டுப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு 7.10 மணியளவில் ரோந்து சென்ற படையினர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. படையினரும் பதில் தாக்குதல் நடத்தியதாகவும், இந்தச் சம்பவத்தில் தமது தரப்பில் எவ்வித சேதமும் ஏற்படவில்லை என படைத்தரப்பு தகவல்கள் தெரிவித்தன.

## கோண்டாவிலில் கிளைமோர் மீட்பு!

யாழ்ப்பாணம்—

கோண்டாவில்–பஸ் டிப்போவுக்கு அண்மையில் நேற்றுக் காலை 10.40 மணியளவில் கிளைமோர் குண்டு ஒன்றை படையினர் மீட்டதாக அறிவித்துள்ளனர்.

யாழ் - பலாலி வீதியில் படையினரை ஏற்றிச்செல்லும் பஸ் வண்டியை இலக்குவைத்தே இந்த கிளைமோர் வைக்கப்பட்டிருந்ததாகவும், இது 5 கிலோ எடை கொண்டதெனவும் படைத்தரப்பு தகவல்கள் தெரிவித்தன. (82)

# இராணுவ புலனாய்வு...

திருந்தமையால்தான் அவர் கொல்லப்பட்டார் என ரங்க பண்டார தெரிவித்தார்.

மலையக மக்கள் முன்னணியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வி.ராதாகிருஷ்ணன் இது பற்றி கூறியதாவது -

அவசரகாலச் சட்டத்தின் கீழ் வடக்கு -கிழக்கு மற்றும் கொழும்பில் தமிழர்கள் படுகொலை செய்யப்படுகின்றனர். நீதிக்குப் புறம்பான படுகொலைகளில் அரச படையினரும், புலனாய்வுத் துறையினரும் ஈடுபட்டு வருகின்றனர்.

இப்போது லக்மல் சம்பத் படுகொலையில் இராணுவத்தின் லெப்டினன்ட் நிலையில் உள்ள அதிகாரிக்கு தொடர்பு இருப்பதாக தெரியவந்துள்ளது.

லக்மல் சம்பத் ஒரு சிங்களவராக இருந்தபோதும் அவிசாவளையில் ஐந்து தமிழர்கள் தலை துண்டிக்கப்பட்டு நிர்வாணமாக வீசப்பட்ட சம்பவத்தின் சந்தேக நபர்களை அறிந்திருக்கிறார்.

ஆகையால், சிங்கள ஊடகவியலாளர் படுகொலை குறித்து அரசாங்கம் உரிய விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

இதனிடையே பெயர் வெளியிட விரும்பாத பொலிஸ் அதிகாரி ஒருவர் - லக்மல் சம்பத் படுகொலை தொடர்பாக இராணுவ புலனாய்வுத்துறை அதிகாரி மற்றும் இரு இராணுவத்தினரை கல்கிசை பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்ததாக ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார். இருப்பினும் இதுவரை எவரும் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவில்லை

## சிப்பாயை...

குறித்த சிப்பாய் முகாமில் இல்லாததையடுத்து அந்தப் பகுதியில் தேடுதல் நடத்திய படையினர் நிற்சாமம் பகுதியிலுள்ள வயலிலிருந்து இவருடையது எனக் கூறப்படும் இராணுவச் சீருடை, ரி. 56 ரக துப்பாக்கி ஆகியவற்றை மீட்கப்பட்டதாகத் தெரியவருகிறது. (47)

## சிப்பாயை சுட்டு...

பொலிஸ் நிலையத்தில் கடந்த மாதம் 30 ஆம் திகதி மாலை 5.30 மணியளவில் சரணடைந்தார்.

இராணுவ பொலிஸார் இவரைப் பொறுப்பேற்று விசாரணை நடத்தி வந்தனர். உவர்மலையிலுள்ள 22 ஆவது டிவிச்ன் தலைமையகத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த மேற்படி சிப்பாய் நேற்றுக் காலை விசாரணைக்காக கொண்டு சென்றபோது சக சிப்பாயின் துப்பாக்கியைப் பறித்து அவரைச் சுட்டுக்கொன்று விட்டு தானும் சுட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

இது தொடர்பாக இராணுவப் பொலிஸ் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (04)

## வேலணையில்...

ஏராளமான மதகுருமார்களும், பக்தர்களும் அல்லைப்பிட்டி சோதனைச் சாவடியில் நீண்டநேரம் தடுத்துவைக்கப்பட்டிருந்ததாகவும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவித்தன.

பிற்பகல் ஒரு மணிக்குப் பின்னரே போக்குவரத்து வழமைக்குத் திரும்பியது.

## அவசர...

தமிழ்த் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஐ.தே.க.வின் நாடாளுமன்ற உறுப்பினர் மகேஸ்வரன் ஆகியோர் பிரேரணைக்கு எதிராக வாக்களித்தனர்.

அவசரகால நீடிப்பு பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது ஐ.தே.கட்சி சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகியன வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# ஊடகவியலாளர்...

ஊடகவியலாளர் சம்பத் லக்மல் உட்பட படுகொலை செய்யப்பட்ட ஏனைய ஊடகவியலாளர்களது விசாரணைகளை உரிய முறையில் நடத்துமாறு சுதந்திர இயக்கத்தின் ஏற்பாட்டாளர் சுனந்த தேசப்பிரிய அரசிடம் வேண்டுகோள் விடுத்தார்.

ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு தொடர்பாக அரசாங்கம் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

ஊடகவியலாளர்கள் தமது செயற்பாடுகளை செய்வதற்கு இடையூறுகள் விளைவிப்பவர்களை அரசாங்கம் தண்டிக்க வேண்டும், ஊடகவியலாளரின் கடமையை சரிவர செய்வதற்கான பாதுகாப்பை அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும், கொலை செய்யப்பட்டவர்களின் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும், குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# அரச கட்டுப்பாட்டுப் பகுதியில்...

இயங்க வேண்டும்.

தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் சிறிய அளவிலான நடவடிக்கையைவிட உறுப்பினர் எண்ணிக்கையை அதிகரித்து வலுவானதாக செயற்படவேண்டும்.

கண்காணிப்புக் குழுவில் இடம் பெறுவோரை கண்காணிப்புக் குழுவினர் தீர்மானிப்பதில்லை. அனுசரணையாளர்கள் மற்றும் இரு தரப்பினர்தான் தீர்மானிக்கின்றனர்.

வன்முறைகள் இடம்பெறுகிறது எனில் போர்நிறுத்த ஒப்பந்தத்திலுள்ள இரு தரப்பினரது பொறுப்புத்தான் அது.

போர்நிறுத்த ஒப்பந்தம் என்பதை கண்காணிக்கின்ற ஒரு அமைப்புதான் கண்காணிப்புக் குழு.

600பேர் வரை கொல்லப்பட்டிருப்பது என்பது மிக அதிகபட்ச வன்முறையாகும். அதை மென் தீவிர யுத்தம் என்று சொல்லலாம். அதை யுத்தம் என்று அரசாங்கமோ, விடுதலைப் புலிகளோ கருதலாம். நாளாந்தம் படுகொலைகைள் இடம்பெறுகின்றன.

கொழும்பு இராணுவத்தலைமையகத் தாக்குதலைப் பொறுத்தவரையில் விடுதலைப்புலிகளுக்கு தொடர்பு உள்ளது என்பதற்கான ஆதாரம் எம்மிடம் இல்லை.இது தொடர்பாக இராணுவத்திடம் பலமுறை கேட்டுவிட்டோம்.

இராணுவத்தலைமையகத்தில் விசாரணை மேற்கொள்ள அனுமதி அளிக்கப்படவில்லை. சம்பவப் பகுதிக்குள் நுழையாமல் நாம் இது குறித்து தீர்மானிக்க முடியாது.

இன்று வரை அரசாங்கத் தரப்பிலிருந்து ஆவணங்கள் தரப்படவில்லை. கருணாகுழுவுக்கும், அரசாங்கத்துக்கும் தொடர்பு இருப்பதாகக் கூறப்படும் குற்றச்சாட்டு குறித்த ஆதாரத்தை அரசாங்கம் எம்மிடம் கேட்டது.

அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில்தான் கருணாகுழு இயங்குகிறது என்பதற்கான ஆதாரங்கள் போதுமான அளவு உள்ளன.

அதை அரசாங்கத்திடம் கையளித்துள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார்.


## பணிநிலை வெற்றிடம்

**1. உதவி ஆசிரியர் -**
(செய்திப் பத்திரிகை ஒன்றில் ஆகக் குறைந்தது இரண்டு வருடங்கள் உதவி ஆசிரியராக கடமையாற்றிய அனுபவம் உள்ளவர்கள் மட்டும்)

**2. அலுவலக செய்தியாளர்கள் - (பயிலுனர்)**
பத்திரிகைத்துறையில் ஆர்வமுடைய க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தி பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம்.

**3. ஒப்புநோக்குநர் -**
க.பொ.த சாதாரணதரத்தில் தமிழில் விசேட சித்தி பெற்றிருப்பதுடன், க.பொ.த உயர்தரத்தில் தமிழை ஒரு பாடமாக எடுத்து தேர்ச்சி பெற்றிருத்தல் விரும்பத்தக்கது.

தகைமையுடையவர்கள் விண்ணப்பங்களை எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக

**பணிநிலை வெற்றிடம்,**
**நமது ஈழநாடு,**
**267, நாவலர் வீதி,**
**யாழ்ப்பாணம்.**
என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

-நிர்வாக இயக்குநர்.



## aat விரிவுரைகள்

ஆரம்பம்
Foundation
Intermediate
Final
08.07.2006
09.00 a.m

பல்கலைக்கழக மாணவர்களே!
உங்கள் தகைமைகளை அதிகரிக்க - தொழில்சார் கற்கைநெறிகளுடன்

இன்றே இணையுங்கள்

விரிவுரைக் கட்டணத்தில் 50% Free

A/Lபரீட்சையில் 2 ஆவது தடவை தோற்றிய மாணவர்களுக்கு

இலவச வழிகாட்டல் ஆலோசனை

மேலதிக விபரங்களுக்கு :

**Career.Com.Institute**
#167, 1st Cross street, Jaffna.
(வேம்படி மகளிர் கல்லூரி அருகில்)
T.P : 0773039448, 0773151510
[C/5445]

அலுவலக நேரம் தினமும் 09.00am - 01.00 pm


இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 07.07.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.